
# தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை




## வருடாந்த அறிக்கை

## 2020

## எமது நோக்கு

"தெங்குக் கைத்தொழிலின் மொத்தத் தேசிய
உற்பத்திக்காக பெருந்தோட்டக் கைத்தொழில் துறை
ஊடாக உயரிய
பங்களிப்பை வழங்குதல் மற்றும்
உற்பத்தி, விற்பனை பல்வகைத் தன்மையின் போது
கோளமய தலைமைத்துவதுடன் செயற்படல்."

## எமது பணிக்கூற்று

மனைப் பயன்பாடு மற்றும் கைத்தொழிலிற்காக
தெங்கு மற்றும் தெங்கு உற்பத்தி விநியோகத்தை
உறுதிப்படுத்துவதன் மூலம்
தெங்குக் கைத்தொழிலின் நீண்டகால வர்த்தக
உற்பத்தித் திறன், பேண்தகு மற்றும் தேசிய பொருளாதாரத்திற்காக
உயரிய பங்களிப்பினை வழங்குவதற்காக வசதிகளை வழங்குதல்.

# அறிமுகம்

மொத்தத் தெங்கு கைத்தொழிலின் அபிவிருத்திக்காக 1971 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி சட்டத்தில் "தெங்கு அபிவிருத்தி அதிகார சபை எனக் கருதப்படும் (இதற்கு பின்னர் "அதிகார சபை" எனக் குறிப்பிடப்படுவது) அதிகார சபை தாபிக்கப்பட வேண்டும்" என்ற 111 ஆம் பகுதியில் 24 வது வாசகத்திற்கு அமைய தாபிக்கப்பட்ட பிரதான நிலையியற் சபை நிறுவனம் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையாகும்.

தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் பணிகள் சட்டத்தின் 30(1) வாசகத்திற்கு அமைய கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

(அ) தெங்குக் கைத்தெழில் மற்றும் தெங்குச் செய்கை மேற்கொள்ளப்படும் காணி மற்றும் தெங்குச் செய்கைக்கான காணிகளை பொருளாதார ரீதியில் பயன்படுத்துவது தொடர்பில் அபிவிருத்தி முன்னிலை தொடர்பாக தீர்மானம் எடுத்தல், அத்துடன் கொள்கைகளை வகுப்பதற்காக அமைச்சருக்கு உதவிகளை வழங்குதல்.

(ஆ) அவ்வாறு தீர்மானிக்கப்படும் அபிவிருத்தி முன்னுரிமைகளுக்கு அமைவாக செயற் திட்டங்கள் மற்றும் யோசனைத் திட்டங்களை வகுத்தல் அல்லது அமுல்படுத்துவதற்காக உதவுதல்.

(இ) அவ்வாறு தயாரிக்கப்படும் செயற்திட்டங்கள் மற்றும் யோசனை முறைகளை அமுல்படுத்தல் அல்லது அமுல்படுத்துவதற்காக உதவிகளை வழங்குதல்.

(ஈ) இச் சட்டத்தின் கீழ் அமைச்சரினால் தாபிக்கப்பட்டுள்ள சபைகளின் செயற்பாடுகளை கூட்டிணைத்தல்

(உ) சபைகளின் வருடாந்த வரவு செலவினை அங்கீகரித்தல் மற்றும் அவர்களுக்கு நிதியத்தை வழங்குதல்.

(ஊ) உரிய முகாமைத்துவ கணக்கீட்டு முறைகளை வகுத்தல், அமுல்படுத்தல் மற்றும் முன்னெடுப்பதற்காக சபைகளுக்கு ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் உதவுதல்.

(எ) அமைச்சரினால் தீர்மானிக்கப்படும் அபிவிருத்தி முன்னுரிமைகள் மற்றும் கொள்கைகள் தொடர்பில் சபைகளின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தல்.

(ஏ) தெங்குக் கைத்தொழில் அல்லது அதன் உற்பத்தி தொடர்பில் ஏதேனும் ஒரு பிரிவு அல்லது தெங்கு செய்கை மூலம் மேற்கொள்ளப்படும் காணி அல்லது தெங்கு செய்கைக்காக காணியினை பயன்படுத்துவது தொடர்பில் விஞ்ஞான ரீதியிலான ஆராய்ச்சியினை மேற்கொள்ளும் எவரேனும் ஒரு நபருக்கு அல்லது சபைக்கு (கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத) நிதி மற்றும் ஏனைய ஏதேனும் முறையில் உதவிகளை வழங்குதல் மற்றும் அவ்வாறான ஆராய்ச்சி பணிகளின் இணைப்புக்களை மேற்கொள்ளல்.

(ஐ) அமைச்சரின் இணக்கப்பாட்டுடன் சமமான உரிமைகள் மற்றும் பணிகளை நிறைவேற்றும் சர்வதேச அமைப்புக்களுடன் ஒத்துழைப்புடன் பணியாற்றுதல்

(ஒ) தெங்குக் கைத்தொழில் மீது தாக்கம் செலுத்தக் கூடிய அல்லது உரிய சகல விடயங்கள் தொடர்பிலும் அமைச்சருக்கு ஆலோசனைகளை வழங்குதல்.

(ஓ) தெங்குக் கைத்தொழில் துறையினை அபிவிருத்தி செய்தல் மற்றும் மீள் உயிரூட்டுவதற்கு தேவையானது என அதிகார சபையினால் கருதப்படுகின்ற விடயங்கள் அனைத்தையும் அமுல்படுத்துவதற்கு சகல நடவடிக்கைகளையும் எடுத்தல்.

**அதிகார சபையின் அதிகாரங்கள், சட்டத்தின் 31 ஆம் வாசகத்திற்கு அமைய கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.**

31 (1) ஆம் அதிகார சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்காக தேவையானது என அல்லது பொருத்தமான அல்லது அது சார்ந்த சகல விடங்களையும் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக அதிகார சபைக்கு அதிகாரங்கள் இருக்க வேண்டும்.

(2) (1) ஆம் உப வாசகத்தின் கீழ் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செயற்திட்டத்திற்குப் பாதிப்புக்கள் இன்றி 22 (2) ஆம் வாசகத்தின் மூலம் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ள சகல அதிகாரங்களையும் சபை மற்றும் சமமான அதிகாரம் சபைக்கு இருத்தல் வேண்டும்.
(3) அமைச்சரினால் பொருத்தமானது எனக் கருதப்படும் வேளையில் அவரினால் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் மேற்கொள்ளப்படும் உத்தரவின் மூலம் 23 ஆம் வாசகத்தின் கீழ் ஒழுங்கு விதிகள் வகுக்கப்பட்டுள்ள விசேட அதிகாரங்கள் மூலம் ஒன்று அல்லது பலவற்றின் அல்லது அதில் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பகுதியினை சபை மற்றும் சமமான முறையில் அதிகார சபைக்கு பொறுப்பளிக்க முடியும்.

தெங்கு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில்களில் மொத்தத் தேசிய உற்பத்திக்கு வருடாந்தம் பாரிய பங்களிப்புக்கள் வழங்கப்படுகின்றன. 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டில் தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதனால் இதுவரை பதிவு செய்யப்பட்ட அதிகூடிய ஏற்றுமதி வருமானமான ரூபா.109 பில்லியன் பெற்றுக்கொள்வதற்கு இயன்றுள்ளதுடன், அது 15% ஆன வளர்ச்சியாகும்.

அமைச்சினால் தெங்கு கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பில் பிரதான கொள்கைகளை இனங்கண்டு வகுக்கும்போது, அதற்காக உதவி வழங்கும் பணிகளை மேற்கொளவ்வதற்கு மேலதிகமாக தெங்குக் கைத்தொழில் செயற்பாடுகள் மற்றும் விற்பனைப் பிரிவினை அபிவிருத்தி செய்யும் போது, மேற்பார்வை செய்கையில் செயற்பாட்டுப் பணிகளை அமுல்படுத்துவதற்காக தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் செயற்பாட்டு அபிவிருத்திப் பிரிவு, தர நிர்வாக மற்றும் தரப்பாதுகாப்புப் பிரிவு, விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு, நிதிப் பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவு என 05 செயற்பாட்டுப் பிரிவுகளை கொண்டமைந்துள்ளதுடன் அவ்வப் பிரிவுகளுக்குப் பொறுப்பாகப் பணிப்பாளர்கள் செயற்படுகின்றனர். இப் பணிகளை மேற்கொள்ளும் போது பொறியியல் பிரிவு மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு என்பன மேற்கூறப்பட்ட பிரிவுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றன.

தலைவர், பிரதான நிறைவேற்று அதிகாரியாக செயற்படுவதுடன், அதிகார சபையின் பணிகளை வழிநடத்துதல், மேற்பார்வை மற்றும் பணிப்பாளர் சபையினால் வகுக்கப்படும் கொள்கைகளை மற்றும் வேலைத் திட்டங்களை அமுல்படுத்துவது பணிப்பாளர் நாயகத்தின் ஊடாக செயற்பாட்டு அபிவிருத்திப் பிரிவு, தர நிர்வாக மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவு, விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு, நிர்வாகப் பிரிவு மற்றும் நிதிப் பிரிவின் பணிப்பாளர்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. இவ் அதிகார சபையின் அங்கீரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 259 பேர் ஆகும். 2020 ஆம் ஆண்டின் சேவையில் ஈடுபட்ட எண்ணிக்கை 199 பேர் என்பதுடன் இவ் ஊழியர்களில் 31 பேர் முகாமைத்துவ மட்டத்தில் உள்ளவர்களாகும்.

## தலைவர் அவர்களது மீளாய்வு


முற்காலத்தில் கரையோரம் சார்ந்த பிரதேசங்களில் இருந்து நிலப்பகுதியை நோக்கி பரவலாக காணப்பட்ட தென்னை மரம், இந்த நாட்டில் கப்ருக்க என்ற புனைப் பெயரால் அழைக்கப்படுகிறது. மேலும் இலங்கை வாழ் மக்களது உணவு முறையில் அத்தியாவசிய தேவையாக விளங்குவதுடன், நேரடியாகவும் மறைமுகமாகவும் வருமானம் ஈட்டும் வழிமுறையாக தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த கைத்தொழில் உருவாகி வருகின்றது. தெங்கு இந்த நாட்டின் பிரதான பொருளாதார பயிர்ச் செய்கைகளுக்கிடையில் முக்கியமான இடத்தையும் தற்போது எட்டியுள்ளது.

இலங்கையில் தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த கைத்தொழில்கள், உலகத்தில் அதிகளவில் தெங்கு உற்பத்தி செய்கின்ற நாடுகளான இந்தோனிஷியா, பிலிபைன்ஸ் மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளுக்கு மட்டும் அடுத்த படியாக உள்ளதுடன், இலங்கையின் வருடாந்த தெங்கு அறுவடை 3000 ம் மில்லியன் காய் தேங்காய்களாகும். மொத்த தேங்காய் உற்பத்தியில் 1800 மில்லியன் காய் தேங்காய்கள் வீடுகள் சார்ந்து நுகரப்படுவதுடன், எஞ்சியவற்றை தெங்கு உள்ளீடுகள் சார்ந்த கைத்தொழில்களான உலர்த்தப்பட்ட தேங்காய், தேங்காய் பால், தேங்காய் எண்ணெய், தேங்காய் பால்மா, தேங்காய் க்ரீம், கொப்பறா மற்றும் தேங்காயாக, தெங்கு கைத்தொழிலில் பயன்படுத்தப்படுகிறது. அதேபோன்று தெங்கு உள்ளீடு சாராத உற்பத்தி கைத்தொழில்களான செயலூக்கமிக்க கார்பன், தேங்காய் நார், தேங்காய்சோறு மற்றும் தேங்காய் மட்டை சார்ந்த கைத்தொழில்களின் பொருட்டு சர்வதேச சந்தையில் அதிக கேள்விகள் நிலவுகின்றன.

தற்போது சர்வதேச சந்தையில் தெங்கு சார்ந்த உற்பத்திகளுக்கு அதிக கேள்விகள் உள்ளதுடன், தெங்கு அபிவிருத்தி அதிகார சபையானது உற்பத்தி செயற்பாட்டுக்காக ஏற்றுமதியில் அளவு ரீதியாகவும், தரத்துடன் கூடியதாக பேணிச் செல்வதற்கும், அதனூடாக சர்வதேச சந்தையில் இலங்கை தெங்கு சார்ந்த உற்பத்திகளுக்கு அதிக கேள்வியை மேலும் அதிகரித்துக் கொள்வதற்காகவும், நிதி பங்களிப்பு, ஆலோசனை மற்றும் ஒழுங்குப்படுத்தல் ஆகிய எல்லா பணிகள் மூலமும் மிக உயர் மட்டத்திலான கடமைப் பொறுப்புளை நிறைவேற்றுதல் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

2019 ஆம் ஆண்டில் அதிகூடிய ஏற்றுமதி வருமானமாக பதிவாகிய ரூபா.மில்லியன் 109 ஆன வருமானம், 2020 ஆம் ஆண்டில் ரூபா பில்லியன் 123 வரை விருத்தி செய்து கொள்வதற்கு இயன்றுள்ளது. 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட COVID-19 உலகளாவிய தொற்று நோய் நிலைமையிலும் ஏற்றுமதி வருமானம் 12% ஆல் அதிகரித்துள்ளது. அதாவது இலங்கையின் ஒட்டுமொத்த தெங்கு கைத்தொழிலில் ஏற்றுமதி வருமானம் எதிர்வுகூறல்களையும் விஞ்சி அதிகரித்துக் கொள்வதற்கு முடிந்துள்ளதுடன், இவ் வீதமானது இதுவரை பதிவு செய்யப்பட்ட அதிகூடிய ஏற்றுமதி வருமானமாகும்.

இலங்கை வாழ் மக்களுக்கு, சரியான உணவு தயாரிப்பு முறைகள் மூலம், வீடுகள் சார்ந்த தேங்காய் பயன்பாட்டின் விரயங்களை குறைத்து, தெங்கு உள்ளீடு சார்ந்த கைத்தொழில்களை மேம்படுத்துவதற்காக பங்களிப்பு மற்றும் ஒழுங்குபடுத்தல் என்பவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கும், தெங்கு உள்ளீடு சாராத கைத்தொழில்களை சரியாகவும் வினைத்திறனுடன் கூடிய முறைமை ஊடாக சேர்க்கப்பட்டு சூழல் நேயத்துடனான வழிமுறைகள் மூலம் உற்பத்தியில் ஈடுபடுத்துவதன் ஊடாக, குறித்த கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கும் தற்போது தெங்கு அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இலங்கை வாழ் மக்களின் பொருட்டு துப்பரவானதும் தரத்துடன் கூடியதுமான தேங்காய் எண்ணெய் அடையாளம் காணக்கூடியவாறு தரச் சான்றிதழ்கள், அச்சிடப்பட்ட லேபல் முறை அறிமுகப்படுத்தல், தரத்துடன் கூடிய உற்பத்தி செயற்பாட்டுக்கு தரத்துடன் கூடிய பொறித்தொகுதிகள் பயன்படுத்துவதற்கு ஒத்தழைப்பு வழங்குதல், உற்பத்தி பரிசோதனைகளுக்கான ஆய்வுகூட சேவைகளை வழங்கி தரச் சான்றிதழ் வழங்குவதன் ஊடாக தரத்தில் உயர்ந்த உற்பத்திகளை மேம்படுத்தல், அரச வங்கிகளுடன் இணைந்து உற்பத்தி செயற்பாடுகளின் பொருட்டு கடன் வசதிகளை வழங்குதல் அடங்கலாக பாரிய கடமைப்பொறுப்புகளை தெங்கு கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு நிறைவேற்றப்பட்டு, இலங்கையின் தெங்கு கைத்தொழிலை சர்வதேச மட்டத்தில் உயர்த்துதல் எமது அபிலாஷையாகும்.



.....
ஜயந்த விக்கிரமசிங்க
தலைவர்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் மீளாய்வு

பொதுவாக மக்களின் பயன்பாட்டில் "கப்ருக்க" என்று அழைக்கப்படும் தென்னம் மரம் சார்ந்து, தெங்கு உள்ளீடு சார்ந்த உற்பத்திகள், தெங்கு நார் சார்ந்த உற்பத்திகள், சிரட்டை கரி சார்ந்த உற்பத்திகள், வேறு அலங்கார பொருட்கள் மற்றும் மரப் பொருட்கள் ஆகிய தலைப்புகளின் கீழ் பல்வகைப்படுத்திய பெறுமதி சேர்க்கப்பட்ட செயற்பாட்டுடன் பல உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. தெங்கு உள்ளீடு சார்ந்து உலர்த்தப்பட்ட தேங்காய், புதிய தேங்காய் எண்ணெய், தேங்காய் பால் மற்றும் கிரீம் உற்பத்திகள் தொடர்பான கைத்தொழிற்சாலைகள் ISO தரச் சான்றிதழ்கள் மற்றும் GMP தரச் சான்றிதழ்கள் பெறப்பட்ட சர்வதேச சந்தையில் தரத்துடன் கூடிய உற்பத்திகளை முன்வைத்து இலங்கையின் தெங்கு உற்பத்திக்கான வர்த்தக குறியை பிரபல்யப்படுத்து-வதற்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. இதற்காக தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் பிரதேச மட்டத்தில் பரிசோதகர்களின் தலையீடும், வழிகாட்டலும், ஆலை அபிவிருத்தி நிதியம் மூலம் வழங்கப்படும் நிதி உதவியுடன் கூடிய ஆய்வுகூட மற்றும் தரக் கட்டுப்பாட்டு சேவைகளின் பங்களிப்பும் சாதகமாகியுள்ளது. நார் சார்ந்த உற்பத்திகளின் விடயம் தொடர்பாக மேலும் அபிவிருத்தி செய்யும் தேவையின்னை அடையாளம் காணப்பட்டு தும்பு சோறு மற்றும் உள்ளீடுகள் சார்ந்த மாதிரி பரிசோதனைகளை விஸ்தரித்தல், உலர்த்தும் மைதானங்களுக்காக நிதிசார் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதன் மூலம் உலக சந்தையில் தற்போதுள்ள கேள்விகளுக்கு உயர்ந்த மட்டத்திலான உற்பத்தி நிரம்பல்களை வழங்குவதன் ஊடாக சர்வதேச சந்தை அணுகுதலை விரிவுபடுத்திக்கொள்வதற்கான வழிகாட்டலை அதிகார சபையால் மேற்கொள்ளப்படுகிறது.

கிராமிய பிரதேசங்களில் தெங்கு சார்ந்த கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள மற்றும் அதில் நாட்டம் உள்ளவர்களுக்கு முறையற்ற கருத்திட்ட துறைகளின் கீழ் பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தல், தொழில்முயற்சியாளர்களை அறிமுகப்படுத்தல் மற்றும் சந்தை கூட்டிணைப்புகள் மூலம் வறுமையை இல்லாதொழிப்பதற்காக குறிப்பிடத்தக்க பங்களிப்பை அதிகார சபையால் வழங்கப்படுகிறது. 2020 ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் பொது மக்களின் வாழ்கை முறையினை சீர்குலைக்கும் வகையில் பரவிய COVID-19 தொற்று நோய் நிலைமை காரணமாக இலங்கையில் ஏற்றுமதி துறையில் தாக்கத்தினை ஏற்படுத்துயுள்ளதுடன், தெங்கு சார்ந்த கைத்தொழில்கள் குறித்த சவால்கள் மத்தியிலும் டொலர் மில்லியன் 661 ஆன வருமானத்தை ஈட்டியுள்ளது. இது 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8% ஆன வளர்ச்சியாகும்.

தற்போது இத் துறையில் உள்ள சவால்களுக்கிடையில், கேள்விகளுக்கு ஏற்ற வகையில் காய்தேங்காய்களின் நிரம்பல் வருடாந்தம் கிடைக்கப்பெறமையை குறிப்பிடலாம். காலாண்டுகளில் காய் தேங்காய்களின் பற்றாக்குறை காணப்படுவதுடன், வெளிநாட்டு சந்தை மீது பரந்தளவில் தங்கியிருக்கும் தெங்கு கைத்தொழிலின் வெளிநாட்டு கொள்வனவாளர்களை பாதுகாத்தல் மற்றும் உள்நாட்டு நுகர்விற்கு தேவையான தேங்காய்களை செலவிட முடியுமான விலைக்கு நுகர்வோரிடம் வழங்குதல் என்பது பாரிய சவாலாக உள்ளது. இத் துறையில் உள்ள சகோதர அரச நிறுவனங்களான தெங்கு பயிர்ச் செய்யும் சபை மற்றும் தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் என்பவற்றுடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்படும் அதிக விளைச்சல் உள்ள தேங்காய் வகைகளை அறிமுகப்படுத்தல், நீர் வழங்கள் முறைகளுக்கு சலுகை வழங்குதல், புதிய பயிர்ச் செய்கைகளை விஸ்தரித்தல், பசளை பயன்பாட்டனை பிரபல்யப்படுத்தல் போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக காய் தேங்காய்களின் உற்பத்தியினை சிறந்த மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு இணைந்த திட்டமொன்றை அணுகுவதற்கு பணியாற்றப்படுகின்றது. வீடுகள் சார்ந்து விரயங்களை குறைந்த மட்டத்தில் பேணிச் செல்லுதல் தொடர்பாக பொது மக்களை அறிவுறுத்தல், தெங்கு சார்ந்த உற்பத்திகள், தேங்காய் மட்டைகள், சிரட்டை கரி சேர்க்கப்படுதல், கைத்தொழிலுக்கு தேவையான மூலப்பொருட்கள் வழங்குதல் தொடர்பாக மக்களை அறிவுறுத்துவதற்கும் அதிகார சபை திட்டமிட்டுள்ளது. இதன்படி கைத்தொழிலாளர்கள், பயிர்ச் செய்கையாளர்கள், ஏற்றுமதி துறையில் ஈடுபட்டுள்ளவர்களுடன் தொடர்பு கொண்டுள்ள எல்லா அரச நிறுவனங்களினதும் பரஸ்பர உறவுகள் மூலம் சிறந்த திட்டமிடலுடன் கூடிய அணுகுமுறையின் ஊடாக இலங்கையின் தேங்காய்க்க வர்த்தக குறியை உலக சந்தையில் பிரபல்யப்படுத்தி "கப்ருக்க" அந்நியச் செலாவணியின் ஆதாராமாக மாற்ற முடியும்.

.....

எம்.எல்.தஷித்த நிரோஷன

பணிப்பாளர் நாயகம்

## 2020 சனவரி மாதம் தொடக்கம் திசெம்பர் மாதம் வரை
## பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்

1 திரு.ஜயந்த விக்கிரமசிங்க - தலைவர்

2. திரு. என்.எஸ்.வனசிங்க

3. திருமதி.அய்.டீ. நிமேஷா மென்டிஸ்

4. திரு.தினேஷ் பிரனாந்து

5 திரு.பிரியலத் கிம்பியஹெட்டிகே


6. திரு. ஜகத் சந்தன தல்கஸ்துவ

7. திரு. உபாலி தம்மிக த சில்வா

## தலைவர் அடங்கலாக கிளைத் தலைவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. ஜயந்த விக்கிரமசிங்க | - | தலைவர் |
| 2. | திருமதி சுரேகா என் அத்தநாயக்க | - | பணிப்பாளர் நாயகம் (பதில் கடமையாற்றும் 2020.03.01 ஆந் திகதி தொடக்கம் 2020.11.30 வரை |
| 3 | திரு.எம்.எல். தசித்த நிரோஷ | - | பணிப்பாளர் நாயகம் 2020.12.01 ஆந் திகதி தொடக்கம் |
| 4. | திருமதி எஸ்.எஸ்.புரசிங்க | - | பணிப்பாளர் (தரக் கட்டுப்பாடு மற்றும் தரப் பாதுகாப்பு) |
| 5. | திருமதி எம்.பீ.சந்தியா காந்தி | | பணிப்பாளர் (நிதி) |
| 6. | திரு. பீ.ஏ.எஸ்.கே.சம்பத் ச | | மரவிக்கிரம பணிப்பாளர் (விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி |
| 7. | திரு. பீ.எதிரிமான்ன | | பணிப்பாளர் (செயற்பாட்டு அபிவிருத்தி பிரிவு) |
| 8. | திருமதி. எஸ்.டப்.ரசிகா | | பணிப்பாளர் (நிருவாகம்) |
| 9. | திரு.டப்.எம்.ரீ.எஸ்.வீரசூரிய | | உள்ளக கணக்காய்வாளர் |

## 2020.12.31 ஆம் திகதியன்று ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு




**குறுகிய உள்ளீடுகள் :**

1. சிரே. முகா. – சிரேஷ்ட முகாமைத்துவ மட்டம்
2. உ/பி பணிப்பாளர் – உதவி / பிரதிப் பணிப்பாளர்
3. மு. ம. – முகாமைத்துவ மட்டம்
4. உ. க. உ. – உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்
5. நி. உ. – நிர்வாக உத்தியோகத்தர்
6. பொ. அ. உத். – பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்
7. செ. அ. உ. – செயற்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்
8. த. நி. உத்தி. – தர நிர்வாக உத்தியோகத்தர்
9. க. மு. ம. – கனிஷ்ட முகாமத்துவ மட்டம்
10. வி. அ. ம. ஆரா. – விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி
11. த. நி. ம. த. பா - தர நிர்வாகம் மற்றும் தரப் பாதுகாப்பு

## உள்ளடக்கம்

அத்தியாயங்களின் இலக்கம்


| | |
|---|---|
| செயற்பாட்டு அபிவிருத்திப்பிரிவு | 01 |
| தர நிர்வாகம் மற்றும் தரப்பாதுகாப்புப் பிரிவு | 02 |
| விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப்பிரிவு | 03 |
| நிருவாகப்பிரிவு | 04 |
| நிதிப்பிரிவு | 05 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை | 06 |
| ஆண்டு அறிக்கை | 07 |

# 01. செயற்பாட்டு அபிவிருத்திப் பிரிவு

தெங்கு சார்ந்த கைத்தொழிலை மேற்பார்வை செய்தல் மற்றும் தெங்குத் சார்ந்த கைத்தொழிலினை அபிவிருத்தி செய்தல் செயற்பாட்டு அபிவிருத்திப் பிரிவின் பிரதான பணியாகும். அதன் கீழ் 2020 ஆம் ஆண்டில் பிரதானமாக கீழ்க் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை எய்துக் கொள்வதற்கு செயற்பாட்டு அபிவிருத்திப் பிரிவு திட்டங்ளை தயாரித்தது.

1. உற்பத்தி நிறுவனங்களில் உற்பத்திச் செயன்முறைகளைக் கண்காணித்தல் மற்றும் அடிக்கடி மாதிரி பரிசோதனைகளை செய்வதன் மூலம் உள்நாட்டு மற்றும் சர்வதேச தரத்தினை நிலை நிறுத்துதல் மற்றும் பொருத்தமானவாறாக தயாரிக்கப்பட்ட உற்பத்திகளை ஏற்றுமதிக்காக முன்னிலைப்படுத்துவதற்கு உதவுதல்.

2. உலர்த்தப்பட்ட தெங்கு கைத்தொழிலின் அபிவிருத்தி நடவடிக்கைகள் அல்லது உற்பத்தி மேற்கொள்ளாத காலப் பகுதிகளில் ஊழியர்களுக்கு வேதனங்களை செலுத்துவதற்காக ஆலை அபிவிருத்தி நிதியம் ஊடாக பங்களிப்பு வழங்குதல்.

3. தரத்தில் உயர்ந்த தேங்காய் எண்ணெய் உற்பத்திக்காக தொழிலாளர்களை ஈடுபடுத்தும் நிகழ்ச்சிதிட்டங்களை நடைமுறைப்படுத்தல்

4. தெங்கு சார்ந்த உற்பத்திக்கான செயற்பாட்டு மற்றும் மூலதன வசதிகளை வழங்குவதன் மூலம் உற்பத்தித் திறன், நன்மைகளை உயர்த்துதல் மற்றும் அலகொன்றிற்கான செலவினை குறைத்தல்.

5. தெங்கு சார்ந்த கைத்தொழிலாளர்களுக்கு தேவையான வங்கி கடன் வசதிகளை பெற்றுக்கொள்வதற்கான வழிகாட்டல் மற்றும் வட்டி சலுகை வழங்குதல்.

6. தெங்கு சார்ந்த உற்பத்திகளில் புதிய முன்னேற்றங்கள், தொழில் நுட்பம் மற்றும் ஆராய்ச்சிகளுக்காக தூண்டல்களை ஏற்படுத்தல் மற்றும் திறன் மேம்பாட்டிற்காக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தொழில்நுட்பங்களுக்கு கைத்தொழிலாளர்களை ஈடுபடுத்துவதற்காக பயிற்சி நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் அலுவலர்களை பயிற்றுவித்தல்.

முறையற்ற கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக பங்களிப்பு வழங்குதல் இந்த திட்டமிடல்களில் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் செயற் பணி மற்றும் நோக்கு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டும், நிலைபேறான அபிவிருத்தியினை இலக்காகக் கொண்டும் உற்பத்திகளின் பண்பு சார் தன்மையினை அதிகரித்தல் மற்றும் இலக்கு வைக்கப்பட்ட ஏற்றுமதி வருமானங்களை அதிகரித்துக் கொள்வது இதன் மூலம் பிரதானமாக எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கேற்ப 2020 ஆம் ஆண்டில் மேற்படி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக செயற்பாட்டுப் அபிவிருத்திப் பிரிவால் நடைமுறைப்படுத்திய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வருமாறாகும்.

1. தெங்கு சார்ந்த உற்பத்தியாளராக பதிவு செய்வதன் மூலம் நடைமுறையில் உள்ள சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப கைத்தொழிலை பராமரிப்பிற்கு ஈடுபடுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்திச் செல்லல்.

2. தெங்கு உற்பத்தி நிறுவனங்களைப் பரிசோதித்தல், மாதிரிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் ஆய்வுகளுக்கு உட்படுத்தல் அத்துடன் அதனூடாக இலங்கையின் தரத்தினை நிலைநிறுத்துவதற்காக கைத்தொழிலாளர்களை ஈடுபடுத்துதல். அதற்கு தேவையான வகையில் ஆலோசனைகளை வழங்குதல்

3. நுண்ணியிரியல் மற்றும் பௌதீக தரச் சான்றிதழ்களை வழங்குவதன் ஊடாக தெங்கு சார்ந்த உற்பத்திகளில் தரங்களை பேணிச் செல்வதற்காக தொழிலாளர்களை ஈடுபடுத்துதல்.

4. தெங்கு உள்ளீடு சார்ந்த கைத்தொழில்களின் பொருட்டு ISO 22000 உணவு பாதுகாப்பு தொடர்பான தரச் சான்றிதழ் முறைமை மற்றும் தெங்கு உள்ளீடு சாராத கைத்தொழில்களுக்கான சிறந்த உற்பத்தி தயாரிப்புகள் முறையாக (GMP)தர முறைமைகள் ஆகிய சர்வதேச தரச் சான்றிதழ்களை பெற்றுக்-கொள்ளும் முறைமைகளில் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு பங்களிப்பு வழங்குவதன்ஊடாக உற்பத்தி செயற்பாடு மற்றும் முடிவுப் பொருட்களின் பண்புசார் தன்மையினை மேம்படுத்தல்.மேலும் உற்பத்திகளின் பொருட்டு சர்வதேச அங்கீகரிப்பை பெற்றுக்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

5. உலர்த்திய தெங்கு உற்பத்தி நிறுவனத்திற்காக ஆலை அபிவிருத்தி நிதியத்தின் கீழ் நவீனமயப்படுத்தல் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் உற்பத்தி மேற்கொள்ளாத சந்தர்ப்பங்களில் ஊழியர் வேதனம் செலுத்துவதற்கு நிதிசார் ஒதுக்கீடு வழங்குதல்.

6. தெங்கு சார்ந்த கைத்தொழிலாளர்களுக்காக மக்கள் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி என்பவற்றுடன் இணைந்து சலுகை வட்டிக் கடன் யோசனை முறையினை அமுல்படுத்துதல் மற்றும் வட்டி சலுகைகள் வழங்குவதன் ஊடாக கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல்.

7. தரமான தேங்காய் எண்ணெய் உற்பத்தி மற்றும் தரமான தேங்காய் எண்ணெயினை வாடிக்கையாளர்களுக்கு சென்றடைவதற்காக உரிய செயன் முறையினை தயாரித்தல் மற்றும் அதற்கு கைத்தொழிலாளர்களை ஈடுபடுத்தல்.

8. தேங்காய் தும்பு நார் உற்பத்திக்காக அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக முதலீட்டு உதவிகளை வழங்குதல்.

9. அலுவலர்களின் வினைத்திறன் மற்றும் பயனுள்ளதான சேவைகளை வழங்கு-வதற்காக திறன்களை மேம்படுத்தல்.

10. செயற்பாட்டு அபிவிருத்தி பிரிவின் ஆராய்ச்சி பிரிவிடம் பரிசோதனைக்கான ISO 17020:2012 அங்கீகாரச் சான்றிதலினைப் பெற்றுக் கொள்ளவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

11. முறையற்ற கைத்தொழில்களின் பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகளை அறிமுக-ப்படுத்துவதற்காக தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், உபகரணங்களை வழங்குதல்.

12. சுற்றாடல் நேயத்துடனான தேங்காய் சிரட்டைகளை எரிக்கும் அடுப்புகளை உருவாக்குவதற்கு முறையற்ற துறையின் தொழிலாளர்களிடம் முதலீட்டு உதவிகளை வழங்குதல்.

1. **தெங்கு சார்ந்த உற்பத்தியாளராக பதிவு செய்வதன் மூலம் நடைமுறையில் உள்ள சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கேற்ப கைத்தொழிலை பராமரிப்பிற்கு ஈடுபடுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்திச் செல்லல்.**


2019 நவம்பர் மாதம் தொடக்கம் 2020 ஆம் ஆண்டில் தெங்கு சார்ந்த உற்பபத்தியாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களை பதிவு செய்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உரிய பதிவு விண்ணப்பங்கள் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையில் கொழும்பு 01, ஆதிபாத வீதியின் கோட்டை அலுவலகத்தில் மற்றும் குருணாகல், கம்பஹா, புத்தளம், காலி, இரத்தினபுரி மற்றும் மாத்தறை போன்ற பிரதேச அலுவலகங்களின் ஊடாகவும் விநியோகிக்கப்பட்டது. மேலும் உரிய பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் இணையத் தளம் ஊடாக பெற்றுக்கொள்வதற்கும், இணையத் தளத்துடன் நேரடியாக (on line) முறை ஊடாக பதிவினை விண்ணப்பம் செய்வதற்கும் கைத்தொழிலாளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. அதன்படி பதிவு செய்யப்பட்ட கைத்தொழில் தொடர்பான விபரம் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

| | | பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | **உற்பத்தி வகை** | **2018** | **2019** | **2020** |
| 1 | உலர்த்தப்பட்ட தெங்கு | 46 | 48 | 46 |
| 2 | தேங்காய் கிறீம் | 15 | 17 | 14 |
| 3 | மாவாக்கப்பட்ட தேங்காய் பால் | 9 | 12 | 13 |
| 4 | கொப்பறா தேங்காய் எண்ணெய் | 69 | 89 | 101 |
| 5 | சுத்தமான தேங்காய் எண்ணெய் | 58 | 60 | 50 |
| 6 | வெள்ளை தேங்காய் எண்ணெய் | 31 | 38 | 39 |
| 7 | MCT எண்ணெய் | _ | _ | 1 |
| 8 | MCT பவுடர் | _ | _ | 2 |
| 9 | கைத்தொழில் தேங்காய் எண்ணெய் | 6 | 7 | 9 |
| 10 | தேங்காய் தண்ணீர் | 22 | 22 | 23 |
| 11 | தேங்காய் வினாகிரி | 1 | 1 | 1 |
| 12 | செப்பனிடப்பட்ட தேங்காய் எண்ணெய் | 23 | 34 | 35 |
| 13 | தேங்காய் பால் | 21 | 22 | 24 |
| 14 | மாவாக்கப்பட்டதேங்காய் பால் | 4 | 6 | 6 |
| 15 | தேங்காய் பால் சார்ந்த உற்பத்திகள் | 4 | 5 | 5 |
| 16 | தேங்காய் வெண்ணெய் | 3 | 7 | 8 |
| 17 | தேங்காய் சீனி | 3 | 4 | 1 |
| 18 | சுத்திகரிக்கப்பட்ட தேங்காய் எண்ணெய் | 7 | 7 | 8 |
| 19 | அழகுசாதனப் பொருட்கள் | 1 | 1 | 1 |
| 20 | கொப்பரை | 35 | 26 | 26 |
| 21 | தேங்காய் விரிப்பு | 4 | 3 | 5 |
| 22 | உலர்த்தப்பட்ட தேங்காய் மீள பொதியிடல் | 2 | 1 | 3 |

| | | | | |
|---|---|---|---|---|
| 23 | தேங்காய் சிறப் | 5 | 3 | 3 |
| 24 | துருவப்பட்டதேங்காய் | 2 | 1 | 1 |
| 25 | தேங்காய் பாணி | 2 | 7 | 10 |
| 26 | தேங்காய் பால் தயாரிப்பாளர் | 2 | 2 | 2 |
| 27 | தேங்காய் எமினோ | _ | _ | 3 |
| 28 | தேங்காய் ஜாம் | 1 | 1 | 1 |
| 29 | தேங்காய்மா | _ | _ | 5 |
| 30 | செயலூக்க காபன் | 9 | 7 | 10 |
| 31 | தும்பு/தும்பு ஆலைகள் | 342 | 267 | 283 |
| 32 | சிரட்டைக் கரி துண்டுகள் | 5 | 5 | 5 |
| 33 | Hub செயற்பாட்டாளர் | 1 | 1 | 1 |
| 34 | சிரட்டைக் கரி | 17 | 33 | 33 |
| 35 | சிரட்டை துண்டுகள்/பவ்டர் | 3 | 1 | 3 |
| 36 | தேங்காய் சிரட்டை சார்ந்த அலங்காரப் பொருட்கள் | 6 | 8 | 11 |
| 37 | முடிவுப் பொருட்கள் | 133 | 126 | 137 |
| 38 | தும்புச்சோறு மூலக் கூறுகள் | 117 | 120 | 124 |
| 39 | தும்பு இடைநிலைத் தயாரிப்புகள் | 31 | 39 | 37 |
| | ஏனைய | 0 | 15 | 2 |
| | மொத்தம் | **1040** | **1046** | **1092** |

அட்டவணை 01: 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை தெங்கு சார்ந்த உற்பத்தியாளர்கள்/ தயாரிப்பாளர்களின் பதிவு

2019 ஆம் ஆண்டிலும் 2020 ஆண்டிலும் அதிகார சபை மற்றும் பதிவு செய்யப்பட்ட தெங்கு சார்ந்த கைத்தொழில்கள் பற்றிக் கருதும் போது, தேங்காய் 1 எண்ணெய், தும்புச் சோறு, அது தொடர்பான உற்பத்திக் கைத்தொழில்கள் தொடர்பான பதிவுகளில் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சி காணப்படுகிறது. முன்னரான ஆண்டுகளில் போன்று 2020 ஆண்டிலும் விசேடமாக தேங்காய் எண்ணெய், தும்புக் கைத்தொழில் என்பவற்றன் அபிவிருத்திக்காக அதிகார சபையினால் வழங்கியுள்ள தொடர்ச்சியான அனுசரணை மற்றும் கருத்திட்டத்தின் சேவைகள் விரிவடைதல் இப் பதிவின் அதிகரிப்பிற்கு காரணமாக உள்ளது.




வரைபடம் 1: மாவட்டங்களின் படி பதிவு செய்யப்பட்ட தெங்கு சார்ந்த உற்பத்தி கைத்தொழில்களின் விரிவாக்கம்

அதன்படி தெங்கு முக்கோணத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கைத்தொழில் விஸ்தரிப்பு 74% ஆகும். எஞ்சிய எல்லா மாவட்டங்களிலும் பதிவு 26% ஆகும்.

## 2. தெங்கு உற்பத்தி நிறுவனங்களைப் பரிசோதித்தல், மாதிரிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் ஆய்வுகளுக்கு உட்படுத்தல், அத்துடன் அதனூடாக இலங்கையின் தரத்தினை நிலைநிறுத்துவதற்காக கைத்தொழிலாளர்களை ஈடுபடுத்துதல். அதற்கு தேவையான வகையில் ஆலோசனைகளை வழங்குதல்

### 2.1 தும்பு நார் மற்றும் தும்புச்சோறு மூலக் கூறுகளின் மாதிரி பகுப்பாய்வு செயற்பாடு

தும்பு நார் உற்பத்தியாளர்கள் தமது நிறுவனத்தின் உற்பத்திகளான தும்பு நார் மற்றும் தும்புச் சோறுகளின் தரம் தொடர்பாக அறிவுறுத்துவதற்கும், விவரக் குறிப்புகளால் விலகல்களை அவதானித்து உற்பத்தி செயன்முறையினை வடிவமைப்பதற்கும் தும்பு நார் மற்றும் தும்புச்சோறு மாதிரிகளை பகுப்பாய்வு செய்தல் நோக்கமாகும்.

இதன் போது தும்புசோறு மூலக்கூறுகளின் மாதிரிகளில் PH பெறுமதி, ஈரப்பதம் (Moisture), மின்கடத்தல் தன்மை (Electrical Conductivity) வெளியக கழிவுகள் (Extraneous matter) ஈகோலி (Ecoli) செல்மனல்லா (salmonella) ஆகிய பண்பளவுகள் , தும்பு மாதிரிகளில் ஈரலிப்பு மற்றும் (Moisture) கழிவுபொருட்கள் (Impurities) ஆகிய பண்பளவுகளும் ஆய்வு செய்யப்பட்டன.

அதன்படி 2020 ஆம் ஆண்டுக்காக அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட தும்புச்சோறு மூலக்கூறுகள் உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து 239 உற்பத்-திகளின் மாதிரிகளை திரட்டி தரச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் தெரிவு செய்யப்பட்ட 130 தும்பு நார் உற்பத்திகளின் மாதிரிகளை திரட்டி தரச் சான்றிதழ்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்தந்த நிறுவனங்களில் ஆய்வு செய்யப்பட்ட இலங்கை தரங்களில் விலகல் சந்தர்ப்பங்களை ஆய்வு செய்து செவ்வையாக்குவதற்கு கைத்தொழிலாளர்களை ஈடுபடுத்தப்பட்டது.

### 2.2 புதிய தேங்காய் எண்ணெய் மாதிரி பகுப்பாய்வு செயற்பாடு

பகுப்பாய்வு அறிக்கை படி, உற்பத்திகளின் புதிய தேங்காய் எண்ணெய்க்கான உற்பத்திகளின் தரமானது இலங்கை தரநியம நிறுவனத்தின் ஒப்பீடுகளுடன் பொருந்தாத சந்தர்ப்பத்தில், அந்த தரவுகளின் செவ்வைத் தன்மை பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ளுதல் இப் பகுப்பாய்வு செயற்பாட்டின் பிரதான குறிக்கோளாகும்.

புதிய தேங்காய் எண்ணெய் மாதிரிகள், அதிகார சபையின் ஆய்வுகூடம்மூலம் இலவச கொழுப்பு அமிலங்கள் (Free fatty acids), நிறம் (Colour) , ஈரப்பதம் (Moisture) , அயடின் மதிப்பு (Iodine value) மற்றும் ஈஸ்ட் மற்றும் பூஞ்ஞனம் (Yeast & Moulds) ஆகிய பண்பளவுருக்களின் கீழ் பகுப்பாய்வுகள் மேறகொள்ளப்பட்டன.

2020 ஆம் ஆண்டில் 23 புதிய தேங்காய் எண்ணெய் மாதிரிகளை பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

### 2.3 தேங்காய் பால் உற்பத்திகளின் மாதிரி பகுப்பாய்வு செயற்பாடு

2020 ஆம் ஆண்டுக்காக 24 தேங்காய் பால் உற்பத்தி கைத்தொழிற்சாலைகளும் 07 மாவாக்கப்பட்ட தேங்காய் பால் உற்பத்தி நிறுவனங்களும் பதிவாகியுள்ளன. தயாரிக்கப்பட்ட தேங்காய் பாலானது இயற்கையான தேங்காய் பால் போன்று தரத்துடனும் போஷாக்குடனும் உள்ளதா என்பதை பின்னாய்வு செய்வதற்காக சந்தையில் உள்ள தேங்காய் பால் மற்றும் மாவாக்கப்பட்ட தேங்காய் பால் என்பவற்றை பரிசோதனைக்கு-உட்படுத்தப்பட்டது. இதன்போது தேங்காய்ப்பால் மாதிரிகளில் கொழுப்பு அளவு PH பெறுமதி பரிசோதனை செய்யப்பட்டதுடன் மாவாக்கப்பட்ட பால் மா மாதிரிகளில் செல்மனல்ல (salmonella) , ஈகோலி (Ecoli) PH பெறுமதி,கொழுப்பு அளவு பரிசோதன செய்யப்பட்டது. தொழிற்சாலை நிறுவனங்களில் 123 தேங்காய் பால் மாதிரிகள் மற்றும் மாவாக்கப்பட்ட 21தேங்காய்ப் பால் மாதிரிகளை பரிசோதனை செய்து ஆய்வு அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட்டது.

தேங்காய்ப் பால் மற்றும் மாவாக்கப்பட்ட பால் உற்பத்தியில் பெற்றுக்கொள்ளப்பட்ட துணைப்பொருளான Coconut shells வினைத்-திறனுடனும் விளைத்திறனுடனும் தேங்காய் எண்ணெய் கைத்தொழிலுக்கு பயன்படுத்தப்பட்டு, இலங்கை தரநியமத்திற்கு அமைவாக செப்பனிடப்பட்ட தேங்காய் எண்ணெய் எவ்வாறு செய்யப்படுகின்றது என்பது தொடர்பாக கைத்தொழிலாளர்களை அறிவுறுத்தும் 03 நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளப்பட்டது.

### 2.4 தேங்காய் எண்ணெய் மாதிரி பகுப்பாய்வு செயற்பாடு

செயற்பாட்டு அபிவிருத்தி பிரிவு மூலம் நடைமுறைப்ப-டுத்தப்படும் பண்புசார் தேங்காய் எண்ணெய் உற்பத்திக்காக இலட்சினை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்,தேங்காய் எண்ணெய் கைத்தொழிற்சலை நிறுவனங்களிலிருந்து 107 தேங்காய் எண்ணெய் மாதிரிகளை பெற்றுக்கொண்டு அந்த நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படை விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, இலங்கை தரநியம நிறுவனத்தில் SLS 32: 2017 இற்கு அமைவாக தேங்காய் எண்ணெயில் அயடின் பெறுமதியும், இலவச கொழுப்பு அமில அளவும், அப்ளடோக்சின் பெறுமதியும் மாதிரி பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு பகுப்பாய்வு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டது.

அந்தந்த நிறுவனங்களில் பரிசோதனை செய்யப்பட்ட இலங்கை தர நியமங்களின் விலகல் சந்தர்ப்பங்களை ஆய்வு செய்து கொள்வதற்காக கைத்தொழிலாளர்களை ஈடுபடுத்தப்பட்டதுடன், பகுப்பாய்வு தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஏற்புடைய நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர் கால நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

### 2.5 தேங்காய் சிரட்டைக் கரி பகுப்பாய்வு செயற்பாடு

2020 ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படும் வகையில் இலங்கையில் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதற்கு பங்களிப்பு வழங்கும் தேங்காய் உற்பத்திகளுடன் தொடர்புடைய பிரதான துறையாக அடையாளம் காணப்படும் செயலூக்கமிக்க சிரட்டைக் கரி உற்பத்தியில் அடிப்படை மூலப்பொருளான சிரட்டைக் கரி பகுப்பாய்வு ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது ஈரப்பதம், சாம்பள் அளவு மற்றும் வெளியக கழிவு பொருட்களின் அளவுருக்கள் தொடர்பாக பகுப்பாய்வு செய்யப்பட்டது. இதன் தொடக்கமாக 09 உற்பத்தி நிறுவனங்களின் மாதிரிகளை பெற்றுக்கொண்டு பகுப்பாய்வு நடவடிக்-கைகளின் பொருட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்தந்த நிறுவனங்களில் பரிசோதனை செய்யப்பட்ட இலங்கை தர நியமங்களின் விலகல் சந்தர்ப்பங்களை கற்கையிட்டு சரிசெய்து கொள்வதற்காக கைத்தொழிலாளர்களை ஈடுபடுத்தப்பட்டதுடன், பகுப்பாய்வு தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஏற்புடைய நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர் கால நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

## 3. நுண்ணியல் மற்றும் பௌதீக தரச் சான்றிதழ்களை வழங்குவதன் ஊடாக தெங்கு சார்ந்த உற்பத்திகளில் தரங்களை பேணிச்செல்வதற்காக தொழிலாளர்களை ஈடுபடுத்துதல்.

செயற்பாட்டு அபிவிருத்தி பிரிவின் சேவைகளை கூட்டிணைக்கும் பிரிவு மூலம் வழங்கப்படும் மேற்படி சேவை ஊடாக ஏற்றுமதியாளர்களிடம் தமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்கையில் தடைநீக்க நடவடிக்கைகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு இந்த சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இந்த தரச் சான்றிதழ் வழங்கும் போது உற்பத்திகளில் பகுப்பாய்வு விவரக் குறிப்புகளுடன் நேரடியாக தொடர்புபடுவதால் தரத்தில் உயர்ந்த உற்பத்திகளை மேற்கொள்வதற்கு அவர்களை துண்டுவிக்கப்படும்.

2020 ஆண்டில் உலர்த்திய தேங்காய் 25,255.15 உற்பத்தி செய்துள்ளதுடன், அதில் நுண்ணியல் மற்றும் பௌதீக அளவுருக்களின் பகுப்பாய்வுக்காக நாளாந்த உலர்த்திய மாதிரிகள் 6006 செயற்பாட்டு அபிவிருத்தி பிரிவிடம் கிடைக்கப்பெற்றுள்ளன. அதனை அடிப்படையாகக் கொண்டு 572 ஏற்றுமதி சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

| சான்றிதழ்களின் வகைகள் | வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | **2019** | **2020** |
| செல்மொனெல்லா அற்றவைகள் | 384 | 197 |
| பௌதீக தரப்பகுப்பாய்வு | 384 | 197 |
| அப்ளடோக்சின் அற்றவைகள் | 127 | 83 |
| சல்பர் டயொக்சைட் அற்றவைகள் | 148 | 95 |
| **மொத்த எண்ணிக்கை** | **1043** | **572** |

அட்டவணை 02: நுண்ணுயிரிகள் மற்றும் உடல் தர சான்றிதழ்களை வறண்டு போனவர்களுக்கு வழங்குதல் ஏற்றுமதிக்காக தயார் செய்யப்பட்ட தேங்காய் பொருட்கள் இருப்புக்கள்

2020 ஆண்டில் வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 50% அளவில் வீழ்ச்சியடைதல் காணப்பட்டது. இதற்கு ஏதுவாக அமைந்த பிரதான காரணம் யாதெனில், 2020 ஆண்டில் இலங்கை உள்ளிட்ட எல்லா நாடுகளுக்கும் தாக்கத்தை ஏற்படுத்திய கோவிட் நிலைமை மற்றும் தேங்காய் உற்பத்தியில் எதிர்பாரா வகையில் ஏற்பட்ட வீழ்ச்சியடைதலும் ஆகும்.

ஏற்றுமதியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களினால் தேவைக்கேற்ப கொண்டு வந்து கையளிக்கப்படும் தெங்கு சார்ந்த உற்பத்தி மாதிரிகளை பகுப்பாய்வுப் பணிகளுக்காக இரசாயண ஆய்வு கூடத்திற்கு அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து, பெறப்பட்ட பெறுபேறு ஆவணங்களுக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு பகுப்பாய்வு அறிக்கைச் சான்றிதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன.

| உற்பத்தி வகை | வெளியிடப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | **2020** | **2019** | **2018** |
| தும்பு | 250 | 316 | 255 |
| தேங்காய் எண்ணெய் | 319 | 211 | 341 |
| உலர்த்திய தேங்காய் | 08 | 18 | 13 |
| கொழுப்பு ஓரளவு நீக்கப்பட்ட உலர்த்திய தேங்காய் | 51 | 87 | 144 |
| தேங்காய்ப் பால் | **03** | **9** | **3** |
| **புண்ணாக்கு** | **03** | **-** | **-** |
| தேங்காய் க்ரீம் | **02** | **-** | **-** |

அட்டவணை 03: தொழிலதிபர்களின் கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கும் வகையில் மீட்டெடுக்கப்பட்ட மாதிரிகளின் முடிவுகளின் அறிக்கைகளை வழங்குதல்

4. **தேங்காய் உள்ளீடு சார்ந்த கைத்தொழில்களின் பொருட்டு ISO 22000 உணவு பாதுகாப்பு தொடர்பான தரச் சான்றிதழ் முறைமை மற்றும் தேங்காய் உள்ளீடு சாராத கைத்தொழில்களுக்கான சிறந்த உற்பத்தி முறைகள் (GMP) தர முறைமைகள் ஆகிய சர்வதேச தரச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளும் முறைமையில் கணக்காய்விற்கு ஒத்துழைப்பு வழங்குவதன்ஊடாக உற்பத்தி செயற்பாடு மற்றும் முடிவுறுத்திய உற்பத்திகளின் பன்புசார் தன்மையினை மேம்படுத்தல். மேலும் குறித்த உற்பத்திகளின் பொருட்டு சர்வதேச அங்கீகரிப்பை பெற்றுக்கொள்வதற்கு பங்களிப்பு வழங்குதல்.**

ISO 22000:2018 என்பது உணவாக நுகர்விற்காக பாதுகாப்பானது என்பதை உறுதிப்படுத்துகின்ற தரச் சான்றுப்படுத்தல் முறைமையாகும். தேங்காய் உள்ளீடு மற்றும் தேங்காய் தண்ணீர் சார்ந்து தயாரிக்கப்படும் உணவு உற்பத்திகளின் பொருட்டு இந்த தரச் சான்றிதழ் பெற்றுக்கொள்வதை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. சர்வதேச தர நியமங்களுடன்கூடிய வினைத்திறனான, பேண்தகு முறைமை தாபிப்பதன் ஊடாக உயர் தரத்திலான உற்பத்தியினை உருவாக்குதல் இதன் அடிப்படை நோக்கமாகும். இதன்மூலம் பன்புசார் மற்றும் தரநியமத்துடன்கூடிய உற்பத்திகளை சந்தைக்கு வழங்கப்படுவதுடன், அதனூடாக கைத்தொழிலாளர்களுக்கு சந்தையினுள் விசேட இடத்தினை கட்டியெழுப்புவதற்கு முடியுமாகும்.

இதன்போது SLAB மற்றும் IFA ஆகிய நிறுவனங்களில் அங்கீகரிக்கப்பட்ட சான்றுப்படுத்திய நிறுவனங்கள் கணக்காய்வு நடவடிக்கைகளை பேணுகையில் கணக்காய்வு பொருட்டு பயிற்சிப்பெற்ற கள அலுவலரை அதற்காக ஈடுபடுத்தப்படுவதுடன், அந்த அலுவலரால் வழங்கப்படும் அவதானிப்பு அறிக்கைபடி சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் உள்ள குறைபாடுகளை செவ்வையாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுப்பி வைக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டு இறுதியில் 62 கைத்தொழில்கள் ISO 22000:2018 கணக்காய்வு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

GMP என்பது சிறந்த உற்பத்தி செயற்பாட்டினை பராமரிக்கப்படுவதாக உறுதிப்படுத்துகின்ற தர முறைமையாகும். இந்த தரச் சான்றிதழ் தும்பு சார்ந்த உற்பத்திகள் மற்றும் தும்புச்சோறு உற்பத்திகளை பதிவு செய்கையில் கட்டாயப்படுத்தப்பட்டது. இந்த தரச் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளும் முறைமையில் கணக்காய்வு நடவடிக்கைகளின் பொருட்டு பங்களிப்பு வழங்குவதன்ஊடாக உற்பத்தி செயற்பாடு மற்றும் முடிவுறுத்தப்பட்ட உற்பத்திகளில் தரத்தினை உயர் மட்டத்தில் பேணிச் செல்வதற்காக செயற்பாட்டு அபிவிருத்தி பிரிவு ஒத்துழைப்பு வழங்குகின்றது. 2020 ஆம் ஆண்டு இறுதியல் 51 கைத்தொழில்களில் GMP கணக்காய்வு பரிசோதனைகளில் பங்களிப்புச் செய்தன


5. **உலர்த்திய தேங்காய் உற்பத்தி நிறுவனங்களுக்காக ஆலை அபிவிருத்தி நிதியத்தின்கீழ் நவீனமயப்படுத்தல், அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் உற்பத்திகள் மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பங்களில் ஊழியர் வேதனம் செலுத்துவதற்காக நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல்**

ஒவ்வொரு உலர்த்தப்பட்ட தெங்கு உற்பத்தி 01 கி.கிராமிற்காக 20 சதத்திலான பணத் தொகையினை குறித்த உலர்த்தப்பட்ட தேங்காய் உற்பத்தி நிறுவனத்தின் பெயரில் தாபிக்கப்பட்டுள்ள, உலர்த்தப்பட்ட தேங்காய் நிதியத்திடம் வரவு வைக்கப்படுகின்றது. சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளின் பொருட்டு குறித்த நிதியத்திலிருந்து தேவையான சந்தர்ப்பங்களில் பணம் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டில் வருடாந்த உலர்த்திய தேங்காய் உற்பத்தி 25,255.15 மெற்றிக் டொன் ஆவதுடன், மாதாந்த உற்பத்திகள் கீழ் உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

| மாதம் | உலர்த்திய தெங்கு உற்பத்தி (மெ.தொ.) |
|---|---|
| ஜனவரி | 2,761.35 |
| பெப்ரவரி | 2,400.15 |
| மார்ச் | 1,334.49 |
| ஏப்ரல் | 700.81 |
| மே | 2176.94 |
| யூன் | 2969.83 |
| யூலை | 2954.12 |
| ஆகஸ்ட் | 2261.48 |
| செப்ரெம்பர் | 2341.65 |
| ஒக்டோபர் | 1624.5 |
| நவம்பர் | 1416.28 |
| டிசம்பர் | 2,313.55 |
| **மொத்தத் தொகை** | **25,255.15** |

அட்டவணை 04: 2020 ஆம் ஆண்டில் மாதாந்த உலர்த்தப்பட்ட தெங்கு உற்பத்தி

இந்த மொத்த உற்பத்தி பொருட்டு தெங்கு அபிவிருத்தி அதிகார சபை, ஆலை அபிவிருத்தி நிதியத்தில் முதலீடு செய்த தொகை ரூபா. மில்லியன் 5.05 ஆகும் அதன்படி ஒரு உலர்த்திய தேங்காய் உற்பத்தி நிறுவனம் தமது கைத்தொழிற்சாலையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், அதற்கு செலவிடப்பட்ட ரூபா. மில்லியன் 1.08 ஆன தொகை இந்த நிதியத்தின் ஊடாக மீள்ளிப்புச் செய்துக் கொண்டது.




வரைபடம் 2 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மாதாந்த உலர்த்திய தேங்காய் உற்பத்தி

2020 ஆம் ஆண்டில் உலர்த்திய தேங்காய் உற்பத்தி, 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 50% அளவிலான வீழ்ச்சியடைதலை காண்பிக்கின்றது. இதற்கு ஏதுவாக அமைந்த பிரதான காரணி யாதெனில், இவ்வாண்டில் இலங்கையில் தேங்காய் அறுவடை எதிர்பார்க்கப்படாத வகையில் வீழ்ச்சியடைதலும். கோவிட் தொற்று நோய் நிலைமை காரணமாக பல மாதங்கள் நாடு முழுவதும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறைப்பட்டதால் உற்பத்தி நடவடிக்கை களை மட்டுப்படுத்த வேண்டி ஏற்பட்டதுமாகும்.

6. **தெங்கு சார்ந்த கைத்தொழிலாளர்களுக்காக மக்கள் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து சலுகை வட்டி கடன் திட்டம் நடைமுறைப்படுத்தல் மற்றும் வட்டி தள்ளுபடிகள் வழங்குவதன் ஊடாக கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல்.**

- மக்கள் வங்கியுடன் ஒன்றிணைந்து, கப்றுக்க உற்பத்தி ஊக்குவிப்புக் கடன் உத்தேசத் திட்டம் 2012.05.16 ஆம் திகதி அவ் வங்கியுடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை மூலமும், பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் ஒன்றிணைந்து, கப்றுக்க ஜய இசுரு கடன் உத்தேசத் திட்டம் 2015.02.25 ஆம் திகதி அவ் வங்கியுடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை மூலமும் ஆரம்பிக்கப்பட்டன. அதனூடாக பதிவிற்காக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களைக் கவரக் கூடிய வகையிலும், அதன்மூலம் அக் கைத்தொழில் அபிவிருத்தியினை இலகுவாக அடைவதனையும் நோக்கமாகக் கொண்டு மேற்படி குறைந்த வட்டிக் கடன் உத்தேசத் திட்டங்கள் இரண்டினை பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மக்கள் வங்கியின் கப்றுக்க உற்பத்தி ஊக்குவிப்புக் கடன் உத்தேசத் திட்டத்தின் மூலம் வங்கியின் வணிக வட்டியின் கீழ் அக் கடன் தொகையினை 60 தவணைகளில் செலுத்துவதற்கு கைத்தொழிலாளர்களுக்கு விடுவிக்கப்பட்டு உள்ளதோடு, அத் தொகைக்காக வருட இறுதியில் 6%வட்டி வீதம் கைத்தொழிலாளருக்கு உரித்துடையதாகுமாறு தயாரிக்கப்பட்டுள்ளது. அதிகமாக கைத்தொழிலாளர்களிடம் இருந்து அறவிடப்பட்ட வட்டி அதிகார சபையினால் கைத்தொழிலார்களுக்கு மீளளிப்புச் செய்வதனை வங்கியினால் செலுத்தப்படுகிறது. பிரதேச அபிவிருத்தி வங்கியின் கப்றுக்க ஜய இசுரு கடன் உத்தேசத் திட்டத்தின் மூலம் நேரடியாக கைத்தொழிலாளர்களுக்கு 6% வருடாந்த வட்டி ஒன்றின் கீழ் கடன் தொகை வழங்கப்படும். இந்த இரண்டு கடன் திட்டங்களும் மீள்நிதிசார் கடன் திட்டங்களாகும்.

மக்கள் வங்கியின் கப்றுக்க உற்பத்தி ஊக்குவிப்புக் கடன் உத்தேசத் திட்டத்தின் கீழ் வங்கி மற்றும் கைத்தொழிலாளர்களுக்கு செலுத்துவதற்கு மீளளிப்புச் செய்யப்படுகின்ற வட்டித் தொகை அதிகார சபைக்கு இது நிகழ் நேரச் செலவாகும். எனினும், பிரதேச அபிவிருத்தி வங்கியின் கப்றுக்க ஜய இசுரு கடன் உத்தேசத் திட்டத்தின் கீழ் கடனைப் பெறுகின்ற கைத்-தொழிலாளர்களால் நேரடியாக 6% வருடாந்த வட்டி வீதத்தின் கீழ் கடன் தவணை வங்கிக்கு செலுத்தப்படுவதாகவும் அக் கடன் திட்டத்தின் கீழ் வட்டி அதிகார சபைக்கு நிகழ் நேரச் செலவொன்று இல்லாத போதிலும் இந்த இரண்டு கடன் உத்தேச திட்டத்தின் கீழ் கைத்தொழிலாளர் வங்கியிடம் செலுத்தப்படுகின்ற 6% ஆன வட்டியில் பாதியினை அதாவது 3% வட்டி தொகையினை அதிகார சபைக்கு வங்கி செலுத்துகின்றது.

அதே போன்று தெங்கு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி 2020.06.04 ஆந் திகதியில் ஒப்பமிடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை பிரகாரம், அதுவரை வழங்கிய ரூபா.மில்லியன் 2.0 ஆன கடன் தொகை ரூபா.மில்லியன் 3.5 வரை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி ரூபா. மில்லியன் 2.0 வரை கடன் தொகை பெற்றுக் கொள்ளப்பட்ட கைத் தொழிலாளர்களிடம் ரூபா. மில்லியன் 3.5 வரை எஞ்சிய கடன் தொகை வழங்குவதற்கு 2020 ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை பொருட்டு மக்கள் வங்கி தனது இணக்கத்தை இதுவரை தெரிவிக்கவில்லை.

இந்த உத்தேசத் திட்டம் இரண்டின் கீழ் கடன் பெற்றுக்கொண்ட கைத்தொழிலாளர்கள் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளவாறு அமையப் பெறுகின்றது.

| வருடம் | மக்கள் வங்கி | | பிரதேச அபிவிருத்தி வங்கி | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | வழங்கப்பட்ட கடன் தொகை (ரூபா. மில்லியன்) | எண்ணிக்கை | வழங்கப்பட்ட கடன் தொகை (ரூபா. மில்லியன்) | எண்ணிக்கை | வழங்கப்பட்ட கடன் தொகை (ரூபா. மில்லியன்) |
| 2012 | 17 | 11.99. | - | - | 17 | 11.99 |
| 2013 | 67 | 47.35 | - | - | 67 | 47.35 |
| 2014 | 40 | 19.67 | - | - | 40 | 19.67 |
| 2015 | 31 | 17.54 | 06 | 7.42 | 37 | 24.96 |
| 2016 | 06 | 1.72 | 06 | 5.67 | 12 | 7.39 |
| 2017 | 02 | 1.50 | 05 | 8.40 | 07 | 9.90 |
| 2018 | 08 | 7.66 | 53 | 65.30 | 61 | 72.96 |
| 2019 | 07 | 5.65 | 59 | 70.86 | 66 | 76.51 |
| 2020 | 01 | 1.5 | 11 | 11.80 | 12 | 13.30 |
| **மொத்தம்** | **179** | **114.58** | **70** | **172.59** | **319** | **282.02** |

அட்டவணை 05: கடன் திட்டங்களின் மொத்த முன்னேற்றம்

| வகை | உள்ளீடு சார்ந்த கைத்தொழில் | | வகை | உள்ளீடு சாராத கைத்தொழில் | |
|---|---|---|---|---|---|
| தேங்காய் எண்ணெய் | 02 | 3.0 | தும்பு | 8 | 7.8 |
| | | | கரி | 1 | 1.0 |
| **மொத்தம்** | **02** | **3.0** | **மொத்தம்** | **9** | **8.8** |

அட்டவணை 06: கைத்தொழில் வகைப்படி

| ஆண்டு | விண்ணப்பத்தாரிகளின் எண்ணிக்கை | கடன்தொகை ரூபா.மில்லியன் | பணம் சீராக்கல் | | செலுத்துவதற்கு மீதியாகவுள்ள கடன்தொகை ரூபா.மில்லியன் | |
|---|---|---|---|---|---|---|
| 2012 | 17 | 11.99 | 16 | 9.99 | 1 | 2.00 |
| 2013 | 67 | 47.35 | 67 | 47.35 | - | - |
| 2014 | 40 | 19.67 | 38 | 18.74 | 2 | 0.93 |
| 2015 | 31 | 17.54 | 14 | 5.19 | 17 | 12.35 |
| 2016 | 06 | 5.50 | 03 | 2.75 | 03 | 2.75 |
| 2017 | 02 | 1.50 | 01 | 0.50 | 01 | 1.0 |
| 2018 | 08 | 7.66 | - | - | 08 | 7.66 |
| 2019 | 07 | 5.05 | - | - | 07 | 5.05 |
| 2020 | 01 | 1.0 | - | - | 01 | 1.0 |
| **Total** | **179** | **117.26** | **139** | **81.34** | **40** | **32.74** |

அட்டவணை 07: மக்கள் வங்கியின் கப்ருக்க உற்பத்தி திரிய கடன் தொகை சீராக்கல் தொடர்பான விபரங்கள்

| விபரம் | 2019 | | | 2020 | | |
|---|---|---|---|---|---|---|
| | கடன்பெறுநர்களின் எண்ணிக்கை | கடன் தொகை (ரூபா.மில்) | அறவிடப்பட வேண்டிய கடன் தொகை (ரூபா.மில்) | கடன் பெறுநர்களின் எண்ணிக்கை | கடன் தொகை (ரூபா.மில்) | அறவிடப்பட வேண்டிய கடன் தொகை (ரூபா.மில்) |
| 12.31 ஆந் திகதியில் | 46 | 35.25 | 17.32 | 01 | - | - |

அட்டவணை 08: மக்கள் வங்கியின் - கப்ருக்க உற்பத்தி திரிய கடன் திட்டத்தின்கீழ் நடைமுறைப்படும் கடன் பெறுநர்களின் விபரம்

| வருடம் | வங்கியின் பரிந்துரை | | | | | | அதிகார சபையினால் பரிந்துரை செய்யப்பட்ட | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வட்டிச் சலுகைகளின் எண்ணிக்கை | | கடன் தொகை ரூ. மில். | | வட்டிச் சலுகைத் தொகை ரூ. மில் | | செலுத்தப்பட்ட வட்டிச் சலுகைகளின் எண்ணிக்கை | | செலுத்தப்பட்ட வட்டிச் சலுகைத் தொகை ரூ. மில் | |
| | **2019** | **2020** | **2019** | **2020** | **2019** | **2020** | **2019** | **2020** | **2019** | **2020** |
| 1 ஆம் காலாண்டு | 61 | 30 | 51.7 | 22.41 | 0.46 | 0.24 | 37 | 17 | 0.42 | 0.19 |
| 2 ஆம் காலாண்டு | 46 | 03 | 38.17 | 4.5 | 0.28 | 0.11 | 20 | 01 | 0.26 | 0.005 |
| 3 ஆம் காலாண்டு | 40 | 13 | 31.54 | 8.9 | 0.24 | 0.12 | 22 | 05 | 0.23 | 0.058 |
| 4 ஆம் காலாண்டு | 44 | - | 35.25 | - | 0.36 | - | 23 | - | 0.25 | - |
| மொத்தம் | | | 156.66 | 35.81 | 1.34 | 0.47 | | | 1.16 | 0.253 |

அட்டவணை 09: 2019 - 2020 ஆண்டுகளுக்கான வட்டி ஒதுக்கீடு செலுத்தல்

| வருடம் | 2019 | 2020 |
|---|---|---|
| வங்கியினால் பரிந்துரை செய்யப்பட்ட வட்டித் தொகை | 1.34 | 0.47 |
| அதிகார சபை மூலமான கொடுப்பனவுகள் | 1.16 | 0.253 |
| வங்கியினால் பரிந்துரை செய்யப்பட்ட கொடுப்பனவின் சதவீதம் | 86.6% | 53.8% |

அட்டவணை 10: 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மக்கள் வங்கியிடம், அதிகார சபையால் கொடுப்பனவு செய்யப்பட்ட வட்டி ஒதுக்கீடுகளின் சாராம்சம்

| | |
|---|---|
| 2020.12.31 ஆம் திகதிக்கு அதிகார சபைக்கு கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 65 |
| 2020 ஆம் ஆண்டில் கடன் வழங்கிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 19 |
| அதற்கேற்றவாறான கடன் தொகை | 23,100,000.00 |

அட்டவணை 11: 2020 ஆம் ஆண்டில் கப்ருக்க ஜய இசுரு கடன் உத்தேச திட்டத்தின் சதவீதம்

இந்த இரண்டு உத்தேச கடன் திட்டம் தொடர்பாகவும் அதிகார சபை மூலம் கைத்தொழில் துறைக்கு நிறைவேற்றப்படும் சேவைகள் தொடர்பாகவும் , தேங்காய் சிரட்டை திட்டம் மற்றும் தேங்காய் மட்டை திட்டம் என்பன மனைகள் மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு கைத்தொழில் துறையினை அணுகுதல் தொடர்பாகவும் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

அதேபோன்று கடன் உத்தேச திட்டங்களில் முன்னேற்றம் தொடர்பாகவும் அமுலாக்கும்போது வங்கி சார்ந்து எழுகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு கடன் திட்டம் மூலம் கைத்தொழிலாளர்கள் இது வரை அடைந்துக்கொண்டுள்ள முன்னேற்றம் தொடர்பாகவும் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்டது.

இதற்கு மேலதிகமாக கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக அடிப்படை தகைமையாக அதிகார சபையில் பதிவும் ஒரு காரணமாக அமைவதால் கடன் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் புதிய பதிவாளர்ளின் பதிவில் வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளது. அதாவது கடன் திட்டம் மற்றும் ஏனைய நிவாரண திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக கைத்தொழிலாளர்களை அதிகார சபையில் பதிவு செய்வதற்காக நேரடியற்ற முறையில் ஈடுபடுத்தலும் நடைபெறுகின்றது.

7. **தரமான தேங்காய் எண்ணெய் உற்பத்தி மற்றும் தரமான தேங்காய் எண்ணெயினை நுகர்வோருக்கு வழங்குவதற்கான செயன்முறை ஒன்றினைத் தயாரித்தல் மற்றும் அதற்கு கைத்தொழிலாளர்களை ஈடுபடுத்தல்.**

8. **7.1.தும்பு நார் கைத்தொழில்களின் உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டிற்கான முதலீட்டு உதவியை வழங்குதல்**

தும்பு நார் சார்ந்த கைத்தொழிலாளர்கள் சிறந்த உற்பத்தி நடைமுறைகள் தொடர்பான சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கு (GMP) முடியாமைக்கான பிரதான காரணியாக உலர்த்தும் மைதானம் இல்லாமை கணக்காய்வின்போது இனங்காணப்பட்டது. அதற்கமைவாக உலர்த்தும் மைதானம் இல்லாத தும்பு நார் கைத்தொழிலாளர்களிடம் முதலீட்டு உதவி வழங்கும் திட்டம் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி உலர்த்தும் மைதானம் இல்லாத தும்பு நார் சார்ந்த கைத்தொழிலாளர்களிடம் முதலீட்டு உதவி வழங்கும் கருத்திட்டம் 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்த ஒதுக்கீடுகளில் 2019 ஆம் ஆண்டில் தெரிவு செய்த 04 கைத்தொழில் நிறுவனங்களுக்கும் 2020 ஆம் ஆண்டில் தெரிவு செய்த 28 கைத்தொழில் நிறுவனங்களுக்கும் முதலீட்டு உதவி வழங்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டில் உலர்த்தும் முறைமையை மேலும் முறைசார்படுத்துவதற்கு மறைக்கப்பட்ட உலர்த்தும் மைதானங்களின் பொருட்டும் முதலீட்டு உதவி வழங்கப்பட்டது. அதன்படி 2020 ஆம் ஆண்டில் தும்பு நார் சார்ந்த 32 கைத் தொழிலாளர்களிடம் உலர்த்தும் மைதானம் பொருட்டு முதலீட்டு உதவி வழங்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டுக்காக வழங்கிய முதலீட்டு உதவி நான்கு இலட்சம் என்ற உச்சவெல்லைக்கமைவாக மேற்கொள்ளப்பட்டது.




புகைப்படம் 1 : முதலீட்டு உதவி வழங்கப்பட்ட உலர்த்தும் தளங்கள்

தேங்காய்த் தும்பு நார் உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்தல் மற்றும் அதன் மூலம் நிரந்தரமான சந்தை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்கள், தேங்காய் தும்பு நார் உற்பத்தித் தொழிலாளர்களை அடையும் நோக்குடன் சாதகமான உற்பத்திப் பயன்பாட்டு சான்றிதழளித்தல்(GMP) தெங்கு நார் கைத்தொழிலிடம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி அதிகார சபையின் கண்காணிப்பின் கீழ் 66 கைத்தொழில் நிறுவனங்களை கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டது.

கணக்காய்வின் குறைபாடுகளை பூர்த்தி செய்து முதன் முதலாக சான்றிதழினைப் பெற்றுக் கொள்கின்ற 07 தொழில் நிறுவனங்களுக்கு GMP சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்காக உயர்பட்சமாக ரூ. 30,000/- இற்கு உட்பட்ட தொகையினை ஈடுசெய்யப்பட்டதோடு சான்றிதழித்தலுக்காக போக்குவரத்து வசதிகள் அதிகார சபையினால் வழங்கப்பட்டது.

## 9. பணியாற்தொகுதியினரை வினைத்திறனாகவும் பயனுள்ளதாகவும் சேவையில் ஈடுபடுத்துவதற்காக திறன் அபிவிருத்தி மேற்கொள்ளுதல்

செயற்பாட்டு அபிவிருத்தி பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைப்-பொறுப்புகளை மிக வினைத்திறனாகவும் பயனுள்ளதாகவும் நிறைவேற்றிக்-கொள்ளும் தேவையின் மீதும் பிரிவில் பணியாற்தொகுதியால் மிக சிறந்த மட்டத்தில் கடமைகளை நிறைவேற்றிக்கொள்ளும் நோக்கத்திலும் 2020 ஆம் ஆண்டில் செயற்திட்டம்படி பயிற்சி மற்றும் மனிதவள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு அதன்படி அந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதன் போது அடிப்படையாக கணக்காய்வு பயிற்சி மற்றும் கடமையின் தேவைபடி ISO, HACCP மற்றும் GMP சான்றுப்படுத்தல் தொடர்பான செயலமர்வு மற்றும் ஏனைய தர முகாமைத்துவ கற்கைநெறிகளின் பொருட்டு செயற்பாட்டு அபிவிருத்தி பிரிவின் பணியாற்தொகுதியிரை பங்குபற்றச் செய்விக்கப்பட்டது.

2020 ஆம் ஆண்டில் 32 உள்ளூர் பயிற்றுவிப்புகள் திட்டமிடப்பட்டாலும் கோவிட் தொற்று நோய் நிலைமை காரணமாக குறித்த பயிற்றுவிப்புகளில் 4 நிகழ்ச்சிகளை மட்டும் நடாத்தப்பட்டன.

## 10. செயற்பாட்டு அபிவிருத்தி பிரிவின் பரிசோதனைகளுக்காக ISO 17020:2012 அங்கீகார/ இசைவிணக்க சான்றிதழைப் பெற்றுக்கொள்ளுதல்

2019/09/19, 20 மற்றும் 23 ஆகிய திகதிகளில் நடாத்தப்பட்ட அடிப்படை மதிப்பீட்டின்போது இலங்கை அங்கீகாரச் சபையால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள இணக்கமற்றவை (Non Conformities) மற்றும் அவதானிப்புகள் (observations) என்பவற்றுக்காக செவ்வைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது. குறித்த செவ்வைப்படுத்தல் மேற்கொண்டதன் பின்னர், உலர்த்திய தேங்காய் மாதிரிகளை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் பரிசோதனை செய்தல் (inspection & sampling) என்பவற்றுக்காக ISO 17020:2012 அங்கீகார சான்றிதழ் , இசைவிணக்க மதிப்பீடு தொடர்பாக இலங்கை அங்கீகரித்தல் சபையின் ( SLAB ) அனுமதி 2020/03/01 ஆந் திகதி வழங்கப்பட்டது.

2020/09/24 மற்றும் 2020/09/30 ஆகிய ,ரண்டு திகதிகளில் நடாத்தப்பட்ட மிதலாவது அவதானிப்பு கணக்காய்வில் (1 st servaillance audit) சுட்டிக் காட்டும் வகையில் இணக்கமற்றவைகளுக்கான (Non Conformities) செவ்வைப்படுத்தல்களை மேற்கொண்டு இந்த அங்கீகரித்தலை மேலும் முன்னெடுத்துச் செலவ்தற்கு அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டது.

அங்கீகாரச் சான்றிதழ் பெற்றுக்கொண்டதன் பின்னர், புதிய தேங்காய் எண்ணெய், தேங்காய் பால், தேங்காய் தண்ணீர் மற்றும் தும்பு சோறு மூலக் கூறுகள் ஆகிய உற்பத்திகளின் பொருட்டு அங்கீகார சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கு தேவையான அடிப்ப டை ஆவணங்கள் தயாரிக்கும் நடவடிக்கை

ஆரம்பிக்கப்பட்டது. ஆயினும் 2020 ஆண்டில் ஏற்பட்ட கோவிட் தொற்று நிலைமை காரணமாக குறித்த நடவடிக்கைகள் பின்னடைவை எதிர் நோக்கிய போதும், 2021 ஆம் ஆண்டில் குறித்த நடவடிக்கைளை முன்னெடுக்கப்படவுள்ளது.

11. **முறையற்ற கைத்தொழில்களின் பொருட்டு பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதற்காக தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், உபகரணங்களை வழங்குதல்**

1971 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி சட்டத்தின் கீழ் நேரடியாக தொடர்பு படாத முறையற்ற வகையில் மேற்கொள்கின்ற தெங்கு கைத்தொழிலை அபிவிருத்தி செய்து குறித்த துறைகளை வலுப்படுத்துவதற்காக புதிய கருத்திட்ட பிரிவு தாபிக்கப்பட்டது.

தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த சிறிய அளவில் முறையின்றி மேற்கொள்கின்ற தைதொழில்கள் பல்வேறு துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தி மேற்கொள்ள-ப்படுவதுடன், சில கைத்தொழில்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைக்கு உற்பத்தி பொருட்களை வழங்குகின்றன. இவற்றுக்கிடையில் அதிகமானவை கைத்தொழில் ஏற்றுமதிகளை நோக்கமாகக் கொண்டு உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த கைத்தொழில்கள் நாடு முழுவதும் வியாபித்துள்ளதுடன், மனை மற்றும் கூட்டாக மேற்கொள்ளப்படுகிறது. அதிகார சபையால் நடாத்துகின்ற பயிற்சி நிகழ்ச்சிகள் மூலம் தும்பு பயன்படுத்தி துடைப்பம், தரைவிரிப்புகளின் உற்பத்தி, துடைப்பம் தயாரித்தல், கயிறு உற்பத்தி மற்றும் தெங்கு சார்ந்த அலங்கார பொருட்களின் உற்பத்தி தொடர்பாக நாடு பூராகவும் பயிற்சி நிகழ்ச்சி திட்டங்கள் நடாத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சிகளின் பலனாக மூலப்பொருட்களின் விரயத்தை குறைத்தல் மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு சுய தொழில் வேலை வாய்ப்புகளை ஆரம்பித்து வருமானம் ஈட்டுவதற்கு ஆற்றல் கிடைக்கப்பெற்றுள்ளது.

இதற்கு மேலதிகமாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகப் பணியகத்தின் கோரிக்கை பிரகாரம் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியவர்களை சமூகமயப்-படுத்தல் பணியின் ஒரு அம்சமாக தெங்கு சார்ந்த கைத்தொழில்களுக்கு பயிற்சி வழங்குதல் தெங்கு அதிகார சபையால் மேற்கொள்ளப்படுகிறது. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் கந்தகாடு, சேனபுர மற்றும் வவுனியா புனர்வாழ்வு நிலையங்களின் கோரிக்கை படி ஒழுங்கமைக்கப்படுகிறது. நிகழ்ச்சித்திட்டத்தின் பொருட்டு செலவாகும் தொகையை புனர்வாழ்வு ஆணையாளர் நாயகப் பணியகம் மூலம் மீளளிப்புச் செய்யப்படுவதுடன், முதலாவது நிகழ்ச்சித்திட்டமாக சேனபுர, மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி பயிற்சி நிலையத்தின் வதிவிடலாளர்கள் பொருட்டு விளக்கமாறு, துடைப்பம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

தெங்கு சார்ந்த சிறிய அளவிலான, மனை மட்டத்திலான கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கு வளங்கள் அதிகமாக உள்ள பிரதேசங்களை முதன்மையாகக் கொண்டு , தொண்டர் அமைப்புகள், அரச மற்றும் தனியார் துறைகளின் கோரிக்கைளை கவனத்தில் கொண்டு புனர்வாழ்வு நிலையங்களில் மற்றும் சர்வதேச தெங்கு தினத்திற்கு இணையாக பின்வரும் இடங்களில் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

| நடைபெற்ற திகதி | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | இடம் | கலந்து கொண்டோர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 02/032020<br>04/03/2020 | விளக்கமாறு மற்றும் துடைப்பம் உற்பத்தி பயிற்சி நிகழ்ச்சி | சேனபுர | 75 |
| 27/08/2020<br>28/08/2020 | தூரிகை உற்பத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் கப்ருக்க அமைப்பின் உறுப்பினர்களுக்காக | வெல்லவாய | 25 |
| 20/08/2020<br>22/08/2020 | சிரட்டைக் கரி சார்ந்த அலங்கார பொருட்களின் உற்பத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | பன்வில | 20 |
| 10/09/2020<br>12/09/2020 | தூரிகை உற்பத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | ஆணமடுவ | 30 |
| 3-5/09/2020 | தூரிகை உற்பத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | இப்பலோகம | 25 |

அட்டவணை 12: 2020 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்





புகைப்படம் **02 :** பயிற்சி திட்டங்கள்

பாரிய அளவிலான கைத்தொழில்களுக்கு தேவையான மூலப்பொருட்கள் கப்ருக்க அமைப்பு உறுப்பினர்கள் ஊடாக சேர்த்தல் தொடர்பாக 03 அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் களுத்துறை, ஹிக்கடுவை மற்றும் கேகாலை ஆகிய பிரதேசங்களில் கப்ருக்க அமைப்புகளின் அலுவலர்கள் மற்றும் கப்ருக்க நிதிய சபையின் அலுவலர்களது பங்களிப்புடன் நடாத்தப்பட்டது. விரயமாகும் தெங்கு சார்ந்த மூலப்பொருட்களை தைத்தொழிலாளர்களிடம் வழங்குவதற்கு கப்ருக்க உறுப்பினர்கள் இணக்கம் தெரிவித்தனர்.

இதற்கு மேலதிகமாக சர்வதேச தெங்கு தினத்திற்கு சமமாக பின்வரும் அறிவுறுத்தல் நிகழ்ச்சிகள் மற்றும் கண்காட்சிகள் உள்ளூர் மட்டத்தில் நடாத்தப்பட்டது.

| திகதி | நிகழ்ச்சித்திட்டம் | இடம் | கலந்து கொண்டோர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 24/08/2020 | சரியாகவும் உரிய தரத்துடனும் சிரட்டைக் கரி உற்பத்தி மேற்கொள்கின்ற முறை தொடர்பாக செய்முறையில் கைத் தொழிலாளர்களை அறிவுறுத்தல் மற்றும் சுற்றாடல் அனுமதிப்பத்திர-த்தை பெற்றுக்கொள்ளுதல் தொடர்பாக அறிவுறுத்தல். | கம்பகா | 30 |
| 08/09/2020 | துப்பரவான தேங்காய் எண்ணெய் உற்பத்தி தொடர்பாக அறிவுறுத்தல் | ஆணமடுவ பிரதேச செயலகம் | 15 |
| 03/09/2020 | தன்னியக்க மட்டைகளை பொருத்துநர்களின் பற்றாக்குறை காரணமாக அழிந்துசெல்கின்ற பிரிஸ்டல் நார் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு இலகு-வாக நடைமுறைபடுத்த முடியுமான புதிய இயந்திரம் தொடர்பாக கைத்தொழிலா-ளர்களை அறிவுறித்தல். | போயவலான தும்பு கைத்தொழிற் சாலை | 26 |

அட்டவணை 13: அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள்

## கண்காட்சிகள்




புகைப்படம் 03 : விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்






புகைபபடம 04 : கணகாடசிகள

சர்வதேச தெங்கு தினத்திற்கி இணையாக தெங்கு பயிர்ச் செய்யும் சபையால் பொலன்னருவை பராக்கிரம சமுத்திர நிலப் பகுதியில் ஒழுங்கமைக்கப்பட்ட கண்காட்சியில் சபை பங்குபற்றியது. இந்த கண்காட்சியில்தெங்கு பயிர்ச் செய்கையாளரின் பொருட்டு பிரதேசத்தின் வளங்களை பயன்படுத்தி கைத்தொழிலை ஆரம்பிப்பதற்குள்ள ஆற்றல் தொடர்பான தெளிவுபடுத்தலை மேற்கொள்ளப்பட்டது. அதிகார சபை மூலம் காண்காட்சி கூடம் தாபிக்கப்பட்டது.

**<u>உபகரணங்கள் மற்றும் முதலீட்டு உதவிகளை வழங்குதல்</u>**

தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த சிறிய அளவிளான முறைசாரற்று மேற்கொள்கின்ற கைத்தொழில்கள் பல்வேறு துறைகள் சார்ந்து பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், இவற்றுக்கிடையில் பெரும்பாலானவைகள் கைத்தொழில் ஏற்றுமதிகளை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது. இந்த கைத்தொழில் நாடு முழுவதும் விரிவடைந்துள்ளதுடன், அதிகளவிலான தொழிலாளர்களிடன் மனை மற்றும் கூட்டு அலகுகளாக மேற்கொள்ளப்படுகின்றன. தரத்துடன் கூடிய உற்பத்திகளை மேற்கொள்வதற்காக குறைந்த வருமானம் பெறுபவர்களிடம் உபகரணங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் கருவிகள் வழங்கப்பட்டன. பாரம்பரிய கைத்தொழில்களுக்கு புதிய தொழில்நுட்பம் சேர்க்கப்படுவதற்காக குறைந்த வருமானம் பெறுவபர்களிடம் உபகரணங்கள் மற்றும் கருவிகள் வழங்குவதற்கும் இயந்திரங்களை சலுகை அடிப்படையில் வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. கப்புருக்க அமைப்பின் உறுப்பினர்களுக்கு பெருந் தோட்ட கைத்தொழில் துறை அமைச்சின் தலைமைத்துவத்தில் தெங்கு அபிவிருத்தி அதிகார சபை, விவசாய நவீனமயப்படுத்தல் கருத்திட்டம்,தெங்கு பயிர்ச் செய்கை சபை மற்றும் கப்புருக்க நிதியம் ஆகிய நிறுவனங்கள் இணைந்து கயிறு திரிப்பதற்கு தேவையான 200 கை இயந்திரங்களை குறைந்த வருமானம் பெறுகின்ற கப்புருக்க அமைப்பின் உறுப்பினர்களிடம் வழங்குவதற்கான அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டம் ஹிக்கடுவ பிரதேச செயலகத்தில் நடாத்தப்பட்டது. குறித்த கப்புருக்க சங்க உறுப்பினர்களின் பொருட்டு தற்போது 100 இயந்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.





புகைப்படம் 05 : உபகரணங்கள் மற்றும் முதலீட்டு உதவியாளர்களை வழங்குதல்

## வழங்கிய உபகரணங்கள்

1. இப்பலோகம கப்ருக்க உற்பத்தி அமைப்பு - தவாஷி தூரிகை உற்பத்தி இயந்திரங்கள் 15

2. திருமதி. டப்ளியு. ஜீ.லீலாவதி, இலக்கம் 825, துட்டுவெவ - சிரட்டைக் கரி சார்ந்த உற்பத்தி உபகரணங்களின் தொகுதி (பென்ச் கிரயின்டர்,பென்ச் ட்ரில், பென்டன்ட் மோட்டார்)

3. திரு. ஏ.ஜீ.உதயகுமார பிரிய தர்ஷன , 404/2/29, கொத்லேபுர, தம்புத்தேகம - சிரட்டை கரி சார்ந்த உற்பத்திகளின் உபகரணதொகுதிகள் (பென்ச் கிரயின்டர்,பென்ச் ட்ரில், பென்டன்ட் மோட்டார்)

4. பிரதேச செயலகம், திஹ கொட- ட்ரிமர் இயந்திரங்கள் 2

5. சீ.பீ. ஜானகி நயனா குமாரி. அலங்காரே, மொரகனே - ட்ரிமர் இயந்திரங்கள்

12. **சூழலுக்கு பொருத்தமான சிரட்டைக்கரி எரிக்கும் அடுப்புகள் நிருமாணிப்பதற்காக முறைசாரற்ற துறையின் கைத்தொழிலாளர்களிடம் முதலீட்டு உதவிகளை வழங்குதல் மற்றும் பிரிஸ்டல் நார் உற்பத்தி இயந்திரங்களின் பொருட்டு முதலீட்டு உதவிகளை வழங்குதல்.**

உயர் தரத்திலான சிரட்டை கரி உற்பத்தி கைத்தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்கு பொருத்தமான தொழில்நுட்பத்தை பெற்றுக் கொள்வதற்காக 08 கைத்தொழிலாளர்களின் பொருட்டு முதலீட்டு உதவி வழங்கப்பட்டது. சிரட்டைக் கரி மற்றும் அதனைச் சார்ந்த பெறுமதிகளுடன் கூடிய கரி உற்பத்தி அலகுகளை ஆரம்பிக்கும் தொழில்முயற்சியாளர்களை ஒன்றிணைத்து சிக்கனத்தன்மை தொடர்பாக பழக்கப்படுத்தி, சமூக பொருளாதார மட்டத்தினை உயர்த்துதல் மற்றும் சுற்றாடல் நேயத்துடனான தரத்துடன் கூடிய உற்பத்திகளை மேற்கொள்வதற்காக ஊக்குவித்தல் இதன்கீழ் மேற்கொள்ளப்பட்டது.

பிரிஸ்டல் நார் உற்பத்தி குறைவடைவதன் காரணமாக அதனை மூலப்பொருட்களாக பயன்படுத்தி தயாரிக்கும் கைத்தொழில்கள் சிரமங்களை எதிர் நோக்குகின்றன. இதற்கு தீர்வாக பாதுகாப்பான மட்டை இடப்படும் இயந்திரத்துடன் கூடிய பிரிஸ்டல் நார் பெற்றுக் கொள்வதற்காக இரண்டு இயந்திரங்களின் பொருட்டு முதலீட்டு சலுகை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

# 02. தர நிர்வாகம் மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவு

தர நிருவாகப் பணிகளை மேற்கொள்வது தொடர்பிலான வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் ஏற்றுமதி இருப்புகளின் பண்புசார் தரத்தை உறுதிப்படுத்தல், பல்வேறுபட்ட கேள்விதாரர்களின் கோரிக்கைகளுக்கு ஏற்றவாறு பரிசோதனை வசதிகளை வழங்குதல் மற்றும் தெங்கு உற்பத்தியினை உள்நாட்டு சந்தைக்கு வழங்கும்போது பரிசோதனைகளை மேற்கொண்டு சான்றிதழ்கள் வழங்குதல் மற்றும் தெங்குசார்ந்த உற்பத்தியினை உயர் மட்டத்திற்கு பேணுவதற்கான ஆலோசனையை வழங்குதல் தர நிருவாகம் மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவின் பிரதான பொறுப்புக்களாகும்.

**இதற்கு அமைய இப் பிரிவின் பணிகள்;**

1. ஏற்றுமதிக்காக அனுப்பப்படும் உலர்த்திய தேங்காய் உற்பத்திகளைப் பரிசோதனை செய்தல் மற்றும் தரத்தை உறுதிப்படுத்தல்.

   - உலர்த்திய தேங்காய்களின் நுண் உயிரியல் மற்றும் பௌதீக இரசாயன பரிசோதனைகளை மேற்கொள்ளல்.

     தெங்கு உற்பத்தித் துறையின் பிரதான உள்ளீடு சார்ந்த உற்பத்தி உலர்த்திய தேங்காய்க் கைத்தொழிலின் பிரதானமாக சிறந்த தரத்தில் நிருவகிக்கப்படுவதுடன் நாளாந்தம் உலர்த்திய தேங்காய் உற்பத்திகள் சகலதும் தர நிருவாகம் மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவின் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றது. ஏற்றுமதியுடன் ஒப்பீடு செய்யும் போது இவ் உற்பத்திக்காக தரச் சான்றிதழை வழங்க இப் பரிசோதனைப் பெறுபேறுகள் பங்களிப்புச் செய்கின்றது.

   - தும்புத் துகள் சார்ந்த உற்பத்தி - பரிசோதனைகளை மேற்கொள்ளல்.

2. தெங்கு சார்ந்த உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபடுவோர், ஏற்றுமதியாளர்கள் மற்றும் நுகர்வோருக்காக மேற்கொள்ளப்படும் சேவைகளாக இரசாயணப் பரிசோதனை சேவை, சலுகைக் கட்டண முறையின் கீழ் மேற்கொள்ளல்.

   இலங்கை தர நிறுவகத்தினால் வெளியிடப்பட்டுள்ள தெங்குசார்ந்த உற்பத்திக்கான தரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நுண் உயிரியல் மற்றும் பௌதீக இரசாயணப் பரிசோதனைகளை மேற்கொள்ளும் இயலுமை தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் தர நிருவாகம் மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவிடம் காணப்படுவதுடன், தெங்குக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழில் முயற்சியாளர்களின் முன்னேற்றத்திற்காக துரித கதியில் பரிசோதனை சேவையினை வழங்க சகல சந்தர்ப்பங்களிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

3. உலர்த்திய தேங்காய் உற்பத்திச் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்காக நுண் உயிரியல், பௌதீக இரசாயணப் பரிசோதனைகளை மேற்கொள்ளல்.

   அதிகார சபையின் இரசாயன கூடத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகளைத் தவிர உலர்த்திய தேங்காய் உற்பத்தித் தயாரிப்பு சார்ந்த உலர்ந்த மற்றும் நீர் மாதிரிகளை சேர்த்துக் கொண்டு அதனை பரிசோதனை செய்து பெறுபேறுகளை வழங்கி தெங்கு உற்பத்திச் செயற்பாடுகளை விருத்தி செய்தல் மற்றும் உற்பத்தியினை உயர் தரத்தில் பேணுவதற்காக பங்களிப்புச் செய்யப்படுகின்றது.

4. தர நிருவாகம் மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவின் இரசாயன கூடத்திற்காக ISO17025 தரச்சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

5. தேங்காய் எண்ணெய் கைத்தொழிலின் சுகாதாரப் பாதுகாப்பினைப் பேணுதல் மற்றும் மேம்படுத்தும் நோக்குடன் தேங்காய் எண்ணெய் உற்பத்தியின் சுகாதாரப் பாதுகாப்பினை பரிசோதனை செய்வதன் மூலம் தேங்காய் எண்ணெய் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களான கொப்பறா, உற்பத்தி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் மற்றும் அதன் துணை உற்பத்தியான பிண்ணாக்கு இலங்கைத் தரத்திற்கு அமைவானதா என பரிசோதனை செய்தல்.

6. உள் நாட்டுச் சந்தையில் காணப்படும் கலப்புத் தேங்காய் எண்ணெய் அடையாளம் காண்பதற்கான பரிசோதனைகளை மேற்கொள்ளுதல் மற்றும் விலகல் தொடர்பாக நுகர்வோர் விவகாரம் தொடர்பான அதிகார சபை மற்றும் சுகாதார அமைச்சின் உணவு நிர்வாகப் பிரிவிடம் அறிவித்தல். தேங்காய் எண்ணெய் உற்பத்தியில் தரத்தினைப் பரிசோதனை செய்வதுடன், அடையாளம் காணப்பட்ட கலப்பு தேங்காய் எண்ணெய் விற்பனையாளர்கள் தொடர்பான விபரங்களை நுகர்வோர் நடவடிக்கைகள் தொடர்பான அதிகார சபை மற்றும் உணவுப் பொருட்களுக்கான நிருவாக அதிகாரங்களைக் கொண்ட நிறுவனமான சுகாதார அமைச்சின் உணவு நிர்வாகப் பிரிவுக்கு வழங்கி, குறித்த நிறுவனங்களுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு கலப்பு தேங்காய் எண்ணெய் பயன்பாட்டின் ஊடாக வாடிக்கையாளர்களை பாதுகாப்பதற்கான சேவைகளை வழங்குதல்.

7. தெங்கு சார்ந்த உற்பத்திகள் தொடர்பில் எழும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முறைப்பாடுகள் தொடர்பாக உற்பத்திப் பரிசோதனைகளை மேற்கொள்ளல்.

8. தெங்கு சார்ந்த உற்பத்தியின் முக்கியத்துவம் தொடர்பாக அறிவுறுத்தல் வேலைத்திட்டங்கள், கண்காட்சியில் பங்கேற்றல்.

9. உணவு சார்ந்த ஏனைய உற்பத்திகளின் பரிசோதனை சேவைகளை முன்னெடுத்தல்.

10. தற்போது இலங்கையில் தரங்களை இற்றைப்படுத்தல் மற்றும் தற்போது தரமற்ற தெங்குசார்ந்த உற்பத்திக்காக தரத்தை வழங்க இலங்கை தர நிறுவகத்துடன் இணைந்து வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல்.

11. தெங்கு சார்ந்த உற்பத்தி கைத்தொழில் காணப்படும் இரசாயன கூட சேவையில் ஈடுபட்டுள்ள பணியாற்தொகுதிக்காக பயிற்சி வேலைத் திட்டங்களை நடாத்துதல்.


இதற்கு அமைய பண்புசார் தரம் மிக்க தெங்கு உற்பத்தியினை உருவாக்குவதும், அதற்கு அமைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையினை விருத்தி செய்வதை நோக்காகக் கொண்டு தெங்கு உற்பத்தியினை பரிசோதனை செய்தல், தர நிருவாகம் மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. இச்சகல பணிகளும் வருடாந்த செயற்பாட்டுத் திட்டமிடலுக்கு அமைய மேற்கொள்ளப்படுவதுடன் 2020 ஆம் ஆண்டின் வருடாந்த முன்னேற்றம் கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

1. ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுப் பயன்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படும் தெங்கு உற்பத்தியின் தரத்தினை உறுதிப்படுத்தல்

1.1 தெங்கு உற்பத்தியின் ஏற்றுமதிக்கு முன்னர் நுண் உயிரியல் பகுப்பாய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் உறுதிப்படுத்தல்

தெங்கு உள்ளீடு சார்ந்த உற்பத்தியின் பரிசோதனைப் பணிகள் பிரதானமாக உலர்த்திய தேங்காய்க்காக மேற்கொள்ளப்படுகின்றது. உலர்த்திய தேங்காய் உற்பத்தி ஆய்வுகூடத்தில் இடம்பெறக்கூடிய நாளாந்த உற்பத்தி, சல்மனல்லா பரிசோதனைக்கு உட்படுத்தல், தர நிருவாகம் மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவின் நுண் உயிரியல் ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கமைய ஏற்றுமதிக்காக அனுப்பப்படும் சகல உலர்த்திய தேங்காய்களினதும் தர நிருவாகம் மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவின் ஆய்வு கூடத்தில் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படும்.


2020 ஆண்டுக்காக நாளாந்த உலர்த்திய தேங்காய் உற்பத்தி 7000 மாதிரி இலக்குகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. மாதிரிகள் 5935 சல்மனல்லாவிற்காக பரிசோதனையை மேற்கொண்டு 2020 ஆம் ஆண்டில் இப்பரிசோதனைக்காக 85% ஆன முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. உலர்த்தப்பட்ட தெங்கு மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தல் அந்த உற்பத்தி கொள்ளளவு மீது தங்கியுள்ளது.




| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாதிரிகளின் எண்ணிக்கை | 6532 | 10223 | 9318 | 6498 | 11609 | 9597 | 11265 | 7097 | 6060 | 10000 | 5935 |
| உற்பத்தி MT | 28850 | 46620 | 41645 | 29200 | 50368 | 41795 | 51219 | 29557 | 24625 | 44081 | 25255 |

வரைபடம் 03: காய்ந்த தேங்காய் உற்பத்தி மற்றும் சோதனைக்காக மாதிரிகளைப் பெறுதல்

2019 ஆம் ஆண்டில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட உலர்த்திய தேங்காய் உற்பத்தியில் 09 மாதிரிகள் சல்மனெல்லா நச்சு தாக்கியுள்ளதாக அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது. விகிதாசாரமாக கருத்திற் கொள்ளும் போது முழுமையான நச்சுத் தன்மை 0.09%ஆகும். 2020 ஆம் ஆண்டில் நச்சுத் தன்மை மாதிரிகள் 02 ஆக காணப்பட்டதுடன், 2020 ஆம் ஆண்டில் நுண் உயிரியல் பரிசோதனைக்குட்படுத்திய உலர்த்திய தேங்காய் மாதிரிகளின் சதவீதமாக மேற்கொண்டால் இது 0.03% ஆகும்.





வரைபடம் 04: தினசரி உற்பத்தியில் இருந்து காய்ந்த தேங்காய் மாதிரிகளில் சால்மோனெல்லா மாசுபாடு சோதிக்கப்பட்டது

| ஆண்டு | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நச்சுத் தன்மை கலந்த விகிதம்% | 0.12 | 0.2 | 0.08 | 0.14 | 0.15 | 0.27 | 0.4 | 1.2 | 0.26 | 0.09 | 0.03 |

வரைப்படம் 04 - செல்மொனெல்லா நச்சாதல்

ஏற்றுமதிக்கு முன்னர் நுண் உயிரியல் பகுப்பாய்வுகளை மேற்கொள்வதற்காக உள்ளீடற்ற உற்பத்திகளில் முன்னுரிமை வழங்கப்படுவது தும்புத் துகள் சார்ந்த உற்பத்திகளாகும். 2019 ஆம் ஆண்டில் 1135 மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டில் 1210 மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இந்த 1210 மாதிரிகளில் 1472 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்மாதிரிகளில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவது விண்ணப்பதாரிகளின் தேவைக்கு அமையவாகும். 2020 ஆம் ஆண்டில் தும்புச் சோறு சார்ந்த உற்பத்தி வருடாந்த இலக்கிற்கு இணைவாக அதிக அளவு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதன் முன்னேற்றம் 121% ஆக பதிவாகியுள்ளது. இம் மாதிரிகளில் சல்மொனெல்லா மற்றும் ஈக்கொலின் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட மாதிரிகளில் சல்மொனெல்லா நச்சுத் தாக்கம் பதிவாகியுள்ளதுடன் எந்தவொரு மாதிரியும் ஈக்கோலை பக்றீரியாவிற்கான தர எல்லைகளைத் தாண்டவில்லை.





வரைபடம் 05: தென்னை நார் சார்ந்த தயாரிப்புகளுக்கான நுண்ணுயிரியல் சோதனை

1.2 உலர்த்திய தெங்கு உற்பத்தியின் ஏற்றுமதிக்கு முன்னரான பௌதீக இரசாயணப் பரிசோதனைகளை மேற்கொள்ளல் மற்றும் உறுதிப்படுத்தல்

பௌதிக மற்றும் உணர்வு ரீதியிலான பரிசோதனைகளாக உலர்த்திய தேங்காயின் நிறம், அளவு, ஈரலிப்பு, சுவை, நறுமணம், மூலப்பொருள், கொழுப்பு ஆகியன பரிசோதனைகள் முக்கியமாக மேற்கொள்ளப்பட்டன.

இதற்கமைய 2020 ஆம் ஆண்டில் 10121 மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், 2020 ஆம் ஆண்டில் 6006 மாதிரிகளை பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. இந்த 6006 மாதிரிகளில் மேற்கொண்டுள்ள மொத்த பரிசோதனைகளின் எண்ணிக்கை 48048 ஆகும். 2020 ஆம் ஆண்டின் இலக்குகளுடன் ஒப்பிடுகையில் முன்னேற்றம் 86% ஆகும்.




| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாதிரிகளின் எண்ணிக்கை | 9913 | 8381 | 8333 | 6586 | 10307 | 9381 | 6509 | 11706 | 9643 | 11343 | 7097 | 6087 | 10121 | 6006 |
| இலக்கு | 10250 | 8750 | 8500 | 8500 | 6800 | 9500 | 6500 | 10500 | 9250 | 9500 | 7500 | 6500 | 9500 | 7000 |

**வரைபடம் 06: 2020 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 86% ஆகும்.**

2019 ஆம் ஆண்டில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட உலர்த்திய தேங்காய் மாதிரிகள் 10,121 இற்குள் 1072 மாதிரிகள் அதாவது 11 % பௌதிக அடையாளங்களில் குறைபாடுகளைக் காண்பித்ததுடன் 2020 ஆம் ஆண்டில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட மாதிரிகள் 6006 இல் 641 மாதிரிகள் அதாவது 11 % குறைபாடுகள் காண்பிக்கப்பட்டுள்ளன. அதற்கு ஏற்ப பௌதீக அம்சங்கள் உரிய தரத்தில் இன்மை 2020 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது. இவ்வாறு இலங்கைத் தரத்துடன் இணங்காத மாதிரிகளுக்கடையில் கூடுதலான விகிதாசாரமாக 57% நிறத்தின்படி தரத்திற்கு உட்படாமைக்கானது ஆகும். தரக்குறைபாடுகள் பற்றிக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| **அளவுருக்கள்** | **இணக்கம் வழங்கப்படாத மாதிரிகள்** | |
|---|---|---|
| | **எண்ணிக்கை** | % |
| வகைப்படுத்தல் | 265 | 41 |
| வர்ணம் | 365 | 57 |
| கழிவான | 02 | 0.3 |
| ஈரளிப்புக் கொண்ட | 43 | 6.7 |
| கருகிய துண்டுகள் | 301 | 47 |
| பொசுங்கிய மணம் | 34 | 5.3 |
| புகை மணம் | 0 | 0 |
| வெளிக் கழிவுப் பொருட்கள் | 15 | 2.3 |
| இணைகள் | 116 | 18 |
| எண்ணெய் சேமிப்பு | 2 | 0.3 |
| எண்ணெயுடன் காணப்படல் | 2 | 0.3 |
| இனிப்புச் சுவை | 15 | 2.3 |
| **சாத்தியமான வாசனை** | 0 | 0 |

அட்டவணை 15: (ஒரு சில மாதிரிகள் தொடர்பில் அதன் தரம் மற்றும் இணக்கங்கள் எட்டப்படவில்லை.)


## 2. தெங்கு சார்ந்த உற்பத்திப் பரிசோதனைகளை மேற்கொள்ளும் சேவையினை முன்னெடுத்தல்

உள்நாட்டு உற்பத்தியாளர்களின் பல்வேறுபட்ட தெங்கு உற்பத்திப் பகுப்பு ஆய்வுகளை மேற்கொள்ளல், சேவையாக அதனை முன்னெடுத்தல் போன்றன தர நிருவாகம் மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. நுண் உயிரியல் பரிசோதனைகள், இரசயாணப் பரிசோதனைகள், பௌதிகப் பரிசோதனைகள் மற்றும் உணர்வு ரீதியிலான பரிசோதனைகள் இதன் கீழ் குறிப்பிடப்படுகின்றன. இச்சேவையினை நியாய விலைக்கு வழங்கப்படுவதுடன் விண்ணப்பதாரிகளுக்கு தேவையான அளவுருக்களுக்கு அமைய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் வழங்கப்படுகின்றன. தெங்கு சார்ந்த உற்பத்தியாளர்கள், நுகர்வோர், சிறிய, நடுத்தர மற்றும் பாரிய வர்த்தகர்கள், ஏற்றுமதியாளர்கள் போன்ற எந்வொரு குழுவிற்காகவும் தெங்கு சார்ந்த உற்பத்திப் பரிசோதனை சேவைகள் வழங்கப்படுகின்றன.

உலர்த்தப்பட்ட தேங்காய் உள்ளீடு அடிப்படையில் கொழுப்பு ஓரளவு நீக்கப்பட்ட தேங்காய், கொப்பறா, தேங்காய் நார், தேங்காய் எண்ணெய், புண்ணாக்கு, தும்புத் துகள் மற்றும் அது சார்ந்த உற்பத்திகள் தேங்காய்ப் பால் மற்றும் பால் சார்ந்த ஏனைய உற்பத்திகள் போன்றன பல்வேறுபட்ட தெங்கு உற்பத்திப் பொருளாக இலங்கை தரத்திற்கு அமைய பரிசோதனை செய்யும் சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்காகத் தேவையான நவீன இரசாயன கூட உபகரணங்கள், தர நிருவாகப் பிரிவில் காணப்படுவதுடன் துரித கதியில் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளும் பணிகள் தர நிருவாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

தரத்துடன் கூடிய தேங்காய் உற்பத்திகளை தயாரித்தல் மற்றும் பரிசோதனை செய்து அதன் நிலைமைகள் தொடர்பாக புரிந்துக்கொள்வதற்கு உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்கும், இலங்கையின் அடையாளத்தைப் பாதுகாக்கக் கூடியவாறு தரத்தில் உயர்ந்த தெங்கு உற்பத்தியினை தொடர்ந்தும் வெளிநாட்டு சந்தைக்கு அனுப்பும் வகையில் ஏற்றுமதியாளர்களை ஊக்குவிப்பதற்காகவும் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையில் மேற்கூறப்பட்ட பதிவு செய்யப்பட்ட தொகுதிகளுக்காக 15% ஆன கழிவுக் கட்டணத்தின் கீழ் இப்பரிசோதனைகள் துரிதமாக மேற்கொள்ளப்படுகின்றன.

பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக தெங்கு உள்ளீடு சார்ந்த உற்பத்தி பிரதானமாக உட்படுத்தப்படுவதுடன் 2019 ஆம் ஆண்டில் 988 மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. 2020 ஆம் ஆண்டில் மாதிரிகள் 867 பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டன. இலக்காகக் கொள்ளப்பட்டுள்ள 925 மாதிரிக்கு இணைவாக இதன் முன்னேற்றம் 107% ஆகும். இம் மாதிரிகள் 900 இல் மேற்கொள்ளப்பட்டுள்ள முழுமையான பரிசோதனைகளின் எண்ணிக்கை 1521 ஆகும். 2020 ஆம் ஆண்டில் தெங்கு உள்ளீடு சார்ந்த உற்பத்திகளில சல்படையொக்சைற் மற்றும் அப்லடொக்சின் பரிசோதனைக்காக மாத்திரம் 453 உலர்த்திய மாதிரிகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. தேங்காய் எண்ணெய் மாதிரிப் பரிசோதனைகள் 2019 ஆம் ஆண்டுக்கு இணைவாக குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது. பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட ஏனைய மாதிரி வகைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.




வரைபடம் 7: தேங்காய் அடிப்படையிலான தயாரிப்புகளுக்கான சோதனை சேவைகளை நடத்துதல்

| வருடம் | உலர்த்திய தேங்காய் (மாதிரி) | பிண்ணாக்கு (மாதிரி) | தேங்காய் எண்ணெய் (மாதிரி) | கோப்பறா (மாதிரி) | ஓளவு கொழுப்பு நீக்கப்பட்ட உலர்த்திய தேங்காய் (மாதிரி) | Coconut spread(மாதிரி) | தேங்காய் கிறீம்/ (மாதிரி) | மாவாக மாற்றப்பட்ட தேங்காய் (மாதிரி) | தேங்கு அல்லாத மாதிரி | தேங்காய் பால் | உலர்த்திய தேங்காய் மாதிரி அபல்டெசின் | Row coconut flaks | வருடம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2014 | 122 | 5 | 161 | 04 | 81 | -- | 11 | -- | 05 | - | 710 | - | - |
| 2015 | 35 | 10 | 158 | 03 | 105 | 01 | 11 | 01 | 01 | - | 214 | - | - |
| 2016 | 58 | 02 | 191 | 01 | 112 | -- | 04 | -- | -- | - | 374 | - | - |
| 2017 | 42 | - | 332 | - | 121 | - | 07 | - | - | - | 366 | - | - |
| 2018 | 13 | - | 344 | - | 141 | - | 01 | -- | 07 | - | 417 | 02 | - |
| 2019 | 18 | 01 | 213 | 01 | 66 | -- | 05 | -- | 15 | 02 | 667 | - | - |
| 2020 | 08 | 03 | 335 | -- | 51 | -- | 03 | 02 | 04 | 03 | 452 | - | 05 |

**Table 16:** *Conducting Testing Service for Coconut Based Products*

## 3. ISO தரச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டுப் பணிகள்

தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் தர நிருவாகம் மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவினால் வழங்கப்படும் பரிசோதனைகளுக்காக சர்வதேச வரவேற்புக் கிடைக்கக் கூடியவாறு மற்றும் பரிசோதனைப் பணிகளை சரியாக, முறையாக மற்றும் கிரமமாக மேற்கொள்வதற்காக ISO17025 தராதர அங்கீகாரத்திற்கு உரியதான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கு ஏற்ப வருடா வருடம் உபகரணங்களைக் கிரமமாக பேணுவது சர்வதேச மற்றும் உள்நாட்டு Inter laboratory மற்றும் Intra laboratory தொழில்சார் திறமை மதிப்பீட்டுப் பரிசோதனைகளுக்காகத் தோற்றியுள்ளதுடன் திருப்திகரமான மட்டத்தில் இது காணப்படுகின்றது.

தேங்காய் எண்ணெய் பரிசோதனை முறைகளுக்காக தர நிருவாகம் மற்றும் தரப் பாதுகாப்பு இரசாயனப் பகுப்பாய்வுப் பிரிவினால் இலங்கையின் தராதர அங்கீகார சபையினால் வழங்கப்படும் ISO17025 தரச் சான்றிதழ், 2012 ஆம் ஆண்டில் எட்டப்பட்டதுடன் அது 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட மேற்பார்வை பரிசோதனைகளில் சித்தி அடைந்து 2023 யூன் மாதம் 29 ஆம் திகதி வரை தர அங்கீகாரம் நீடிக்கப்பட்டுள்ளது.

உலர்த்திய தேங்காய் நுண் உயிரியல் பரிசோதனையான சல்மொனெல்லா, முழுமையான பரம்பல் அளவு எண்ணிக்கை, திரவ மற்றும் பூஞ்சன எண்ணிக்கை, கொலிபொம் எண்ணிக்கை, ஈ -கோளை எண்ணிக்கைக்காக 2019 ஜனவரி மாதம் இடம்பெற்ற மேற்பார்வை பரிசோதனையில் சித்தி அடைந்து இலங்கை தரா தர அங்கீகார சபையினால் வழங்கப்படுகின்ற ISO17025 இன் அங்கீகாரம் 2023 யூன் மாதம் 29 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது


SLAB
SRI LANKA ACCREDITATION BOARD

Certificate of Accreditation

Sri Lanka Accreditation Board for Conformity Assessment
hereby declares that

Chemical and Microbiology Laboratory
Quality Control and Quality Assurance Division
Coconut Development Authority

having being found to comply with the accreditation criteria for testing/calibration laboratories as described in ISO / IEC 17025 :2017, has been accredited as a testing laboratory under the field of

Chemical and Biological Testing

and has been assigned the accreditation number
TL 030 - 01

This certificate is issued on 30 June 2020 and is valid until

29 June 2023

The accreditation was granted for the first time for Chemical laboratory on 2012-06-12 and Microbiology laboratory on 2015-10-15.

The scope and conditions of accreditation are specified in the Schedule of Accreditation bearing the accreditation number appearing in this certificate.

Director / CEO
Sri Lanka Accreditation Board for Conformity Assessment
Colombo, Sri Lanka

புகைப்படம் 6: SLAB சான்றிதழ்



As an accredited laboratory, this laboratory is entitled to use the following accreditation symbol.

Valid from 30 June 2020
to 29 June 2023
Issued on 30 June 2020

ISO/ IEC 17025
TL 030-01

Schedule of Accreditation

Accreditation Scheme for Testing Laboratories
Sri Lanka Accreditation Board for Conformity Assessment
Accreditation Number: TL 030-01


**Chemical & Microbiology Laboratory**
**Quality Control and Quality Assurance Division**
**Coconut Development Authority**
No. 54, Nawala Road
Colombo 05

**Scope of Accreditation:** Performing Chemical and Biological testing on Food and Agricultural Products and Potable water as per SLS and ISO methods.

The laboratory is accredited for the following tests.

| Sl No. | Product(s) / Material of test | Specific tests performed | Test method / Standard against which tests are performed | Range of testing / Limits of detection |
|---|---|---|---|---|
| **Biological Testing** | | | | |
| 1.1 | Food and Agricultural Products (Coconut Oil) | Enumeration of Yeast and Moulds | SLS 516 Part 02 section 02:2013 ISO 21527:2008 | 10 -$10^5$ |
| 1.2 | | Enumeration of microorganisms colony count technique at 30°c (Aerobic plate count) | SLS 516 Part 01 section 01:2013 ISO 4833:2013 | 10 -$10^5$ |
| 2.1 | Food and Agricultural Products (Desiccated coconut, Coconut milk, Coconut milk powder, Coconut water, Coir fibre pith substrate, Copra, Partially defatted desiccated coconut, Fresh coconut kernel) | Detection of *Salmonella sp.* | SLS 516 Part 05:2013 ISO 6579:2002 | Present/Absent |
| 2.2 | | Detection and enumeration of Coliforms | SLS 516 Part 03 section 01:2013 ISO 4831:2006 | MPN 3 -1100 |
| 2.3 | | Detection and enumeration of *Escherichia Coli* | SLS 516 Part 12:2013 ISO 7251:2005 | MPN 3 -1100 |
| 2.4 | | Enumeration of microorganisms colony count technique at 30°c (Aerobic plate count) | SLS 516 Part 01 section 01:2013 ISO 4833:2013 | 10 -$10^5$ |
| 2.5 | | Enumeration of Yeast and Moulds | SLS 516 Part 02 section 02:2013 ISO 21527:2008 | 10 -$10^5$ |
| 3.1 | Potable Water | Detection and enumeration of *E. coli* & Coliform Bacteria | SLS 1461: Part 1: Section 3: 2013 | MPN 0 - 1800 |

Page 01 of 02



| Sl No. | Product(s) / Material of test | Specific tests performed | Test method / Standard against which tests are performed | Range of testing / Limits of detection |
|---|---|---|---|---|
| 4.1 | Food and Agricultural Products (Aqueous coconut products - Milk Cream & Paste) | Enumeration of Yeast and Moulds | SLS 516 Part 02 section 02:2013 ISO 21527:2008 | 10 -$10^5$ |
| 4.2 | | Detection of *Salmonella sp.* | SLS 516 Part 05:2013 ISO 6579:2002 | Present/Absent |
| 4.3 | | Detection and enumeration of Coliforms | SLS 516 Part 03 section 01:2013 ISO 4831:2006 | MPN 3 -1100 |
| 4.4 | | Detection and enumeration of *Escherichia Coli* | SLS 516 Part 12:2013 ISO 7251:2005 | MPN 3 -1100 |
| **Chemical Testing** | | | | |
| 1.1 | Food and Agricultural Products (Vegetable Oil) | Determination of saponification value | SLS 313: Part 2, Section 1: 2014 ISO 3657: 2013 | 150 – 300 |
| 1.2 | | Determination of Iodine value | SLS 313: Part 2, Section 2: 2014 ISO 3961: 2013 | 5 - 200 |
| 2.1 | | Determination of Free Fatty Acid (Acidity) | SLS 313: Part 2, Section 1: 2009 ISO 660: 2009 | 0.1 – 20.0 |
| 2.2 | Potable Water /Drinking water/ Processing water | Chloride as Cl | APHA 4500 – Cl – B | 1 – 400 (mg/L) |
| 2.3 | | Total hardness as $CaCO_3$ | APHA 2340 C | >1 mg/L |
| 2.4 | | Calcium (as Ca) | APHA 3500 Ca A | 0.8-200 mg/L |
| 3.1 | | Magnesium | APHA 3500 Mg B | 0.5-50 mg/L |

Director / CEO
Sri Lanka Accreditation Board for Conformity Assessment

புகைப்படம் 7: SLAB சான்றிதழ்

தேங்காய் பால் சார்ந்த உற்பத்திகள் மற்றும் தேங்காய் எண்ணெயில் உள்ள நுண்உயிரியல் அளவுருக்களுக்கான அங்கீகரிப்பு பெற்றுக்கொள்வதற்காகவும் நீரின் இரசாயன அளவுருக்களின் பொருட்டு அடிப்படை அங்கீகரிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்தல் 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இதன் மேற்பார்வை பரிசோதனைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்காக இலங்கை அங்கீகரிப்புச் சபையால் வழங்கப்படும் ISO 17025 தராதர அங்கீகாரம் 2023 யூன் மாதம் 29 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

## 3.2 பயிற்சி வேலைத்திட்டங்களை நடாத்துதல்

தர நிருவாகப் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ISO அங்கீகாரத் தரத்தின் நடவடிக்கைகளுக்காக காலோசிதமாக திருத்தம் செய்யப்பட்டுள்ள தெங்கு உற்பத்தி பரிசோதனை முறைமைகளின் பொருட்டு தேவையான பயிற்சி இரசாயன கூடத்தின் ஊழியர்களுக்காக வழங்கப்பட்டுள்ளதுடன், ஏனைய வெளி இரசாயன கூடங்களின் ஊழியர்களுக்காக தரநிர்வாக மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவினால் பயிற்சி வேலைத் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. வருடாந்த திட்டங்களுக்கு அமைய முன்னேற்றம் பின்வருமாறாகும்.

| | பயிற்சி வேலைத் திட்டங்கள் | பங்கேற்ற ஊழியர்களின் எண்ணிக்கை | பயிற்சி நடாத்தப்பட்ட நிறுவனம் |
|---|---|---|---|
| 1 | Consultant development training programme on Chemicals Management and Safety | 01 | National Cleaner Production Centre |
| 2 | Internal Auditing of Laboratory Management System as per ISO/IEC/17025:2017 | 02 | Sri Lanka Accreditation Board |
| 3 | Awareness Programme – Introduction of GLP principles to Research & Development laboratories | 01 | Sri Lanka Accreditation Board |
| 4 | Online workshop on HACCP/ISO 22000 standard and implementation of FSMS | 02 | Sri Lanka Standards Institute |
| 5 | Online Awareness Programme on GLP | 05 | Sri Lanka Accreditation Board |
| 6 | Latest microbiological Testing Solution | 01 | Analytical Instruments Pvt. Ltd., |
| 7 | SLAB Forum for inspection Bodies & Inspectors | 03 | Sri Lanka Accreditation Board |
| 8 | Ensuring Food safety with the contribution of NQI partners | 03 | Sri Lanka Accreditation Board |

அட்டவணை 17 : பயிற்சி திட்டங்கள்

4. **ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யப்படும் தெங்கு உற்பத்திக் கைத்தொழிலில் உள்ள தரத்தினைப் பாதுகாத்தல்.**

உலர்த்திய தெங்கு உற்பத்திச் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்காக நுண் உயிரியல் மற்றும் பௌதீக பரிசோதனைகளை மேற்கொள்ளல், கைத்தொழில்சாலை பரிசோதனைகள் மற்றும் ஆலோசனைப் பங்களிப்பினை வழங்குதல் என்பன இதன் கீழ் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் ஆகும்.

2020 ஆம் ஆண்டில் 134 களப் பரிசோதனைகளை நடாத்த முடிந்துள்ளது. உற்பத்தியாளர்களின் கோரிக்கைகளுக்கு அமைய பரிசோதனைகளை மேற்கொள்ளும் பணிகள் அதிகரித்துள்ளமையினால் 2020 ஆம் ஆண்டு இலக்கிற்கு இணைவான முன்னேற்றம் 100 % ஆகும்.

உலர்த்திய தேங்காய் உற்பத்தித் தரத்தை விருத்தி செய்வதற்காக நுண் உயிரியல் பரிசோதனைகளை மேற்கொள்ள 2019 ஆம் ஆண்டிற்காக 411 மாதிரிகள் என்பதுடன், 2020 ஆம் ஆண்டிற்காக 67 மாதிரகளாகும். இவ் 67 மாதிரிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முழுமையான பரிசோதனைகளின் எண்ணிக்கை 201 ஆகும். 2020 ஆம் ஆண்டின் இலக்கிற்கு இணைவாக முன்னேற்றம் 100%ஆகும்.

மேலும் உலர்த்திய தேங்காய் உற்பத்தியின் போது பயன்படுத்தப்படும் தண்ணீர் உரிய தரத்தில் காணப்படுகின்றதா என்பது தொடர்பில் பரிசோதனை மேற்கொள்வதற்காக அந்நீரில் நுண் உயிரியல் மற்றும் இரசாயனப் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக 60 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டின் இலக்கிற்கு இணைவாக முன்னேற்றம் 100 %ஆகும்.

5. **செயற்பாட்டு அபிவிருத்தி பிரிவின் நடைமுறைகளுக்கு ஏற்புடையதாக தெங்கு உற்பத்தி பகுப்பாய்வு**

செயற்பாட்டு அபிவிருத்திப் பிரிவின் தேவைக்கு ஏற்றவாறு நாளாந்தம் பரிசோதனை செய்கின்ற அடிப்படையில் சுத்தமான தேங்காய் எண்ணெய் மற்றும் தும்புச் சோறு மாதிரிகள் சேர்த்துக் கொள்ளப்பட்டன. சுத்தமான தேங்காய் எண்ணெய் மற்றும் மாதிரிகள் 28 ஐ பரிசோதனைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதோடு, அதில் மொத்த மாதிரிகளின் பரிசோதனையின் முன்னேற்றம் 56 %ஆகும். 84 தேங்காய் எண்ணெய் மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளதுடன், அதன் முன்னேற்றம் 84% ஆகும். 191 தும்பு சோறு கூறுகளின் மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளதுடன், மாதிரி பரிசோதனையின் முன்னேற்றம் 80% ஆகும். அதன் படி 84 தேங்காய் எண்ணெய் மாதிரிகளில் இலவச கொழுப்பு அமில அளவு தரத்துடன் இணங்காமை காரணமாக 14% ம், அயடின் பெறுமதி இணங்காமை மீது 8% பதிவாகியுள்ளது.

துன்கன்னாவ இரசாயனகூடத்தில் உள்ள ஆய்வக வசதிகளில், தும்புநார் சார்ந்த உற்பத்திப் பொருட்கள் பரிசோதிக்கப்பட்டதோடு 108 மாதிரிகளை பரிசோதனை செய்து 60% என்ற வகையில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

166 தேங்காய் பால் மாதிரிகளை பரிசோதனை செய்யப்பட்டுள்ளதுடன், முன் னேற்றம் 128 % ஆகும். கொப்பறா மாதிரிகள் 03 ஐ பரிசோதனை செய்யப்பட்டுள்ளதுடன், முன்னேற்றம் 6% ஆகும். 09 சிரட்டை கரி மாதிரிகளை பரிசோதனை செய்யப்பட்டுள்ளதுடன், முன்னேற்றம் 38% ஆகும்.

ஏனைய வெளிச் செயற்பாடுகள்

1. அறிவுறுத்தல் வேலைத்திட்டங்களுக்கான பங்களிப்பு

| வேலைத்திட்டங்கள் | நடாத்தப்பட்ட நிறுவனம் மற்றும் இடம் | திகதி |
|---|---|---|
| 1. தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிறுவனங்களை பரிசோதனை செய்தல் தொடர்பான மாவட்ட செயலமர்வு | மாத்தறை | 2020/06/26 |
| | ஹம்பாந்தோட்டை | 2020/06/26 |
| | கம்பஹா | 2020/07/03 |
| | புத்தளம் | 2020/07/03 |
| | குருநாகல் | 2020/07/13 |
| | களுத்துறை | 2020/07/17 |
| | புத்தளம் | 2020/08/13 |
| 2. கன்னி தேங்காய் எண்ணெய் உற்பத்தி மற்றும் தர உத்தரவாதம் குறித்த தொழில்நுட்ப பரிமாற்ற பட்டறை | இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்தி சபை | 2020/08/20 |
| 3. சிறந்த உற்பத்தி வழக்கங்கள் GMP தொடர்பாக தும்பு மற்றும் தும்பு நார் சார்ந்த உற்பத்தி கைத்தொழிலாள-ர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | தெங்கு அபிவிருத்தி பயிற்சி நிலையம், பண்டிரிப்புவத்தை, லுணுவில | 2020/09/10 |

அட்டவணை **18 :** விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு பங்களித்தல்

2. தெங்கு சார்ந்த உற்பத்தியாளர்களின் பொருட்டு இலங்கை தரநியம நிறுவனத்திடன் இணைந்து தரங்களை தயாரித்தல் மற்றும் தற்போதுள்ள தரங்களை திருத்தம் செய்தல்

3. மொத்த தெங்கு உற்பத்தி கைத்தொழிலுக்கான ஒழுங்குவிதிகளை தயாரிப்பதற்கு பங்களிப்பு வழங்குதல்

4. தெங்கு அதிகார சபையின் கடமைப் பொறுப்பு மற்றும் தெங்கு கைத்தொழிலுக்காக தெங்கு அதிகார சபையின் தலையீடு தொடர்பாக சிரஸ நிறுவனத்தால் ஒளிபரப்பும் "ஜிவிதயட்ட இடதென்ன" நிகழ்ச்சித்திட்டத்தில் 2020/07/09 பங்கு கொள்ளுதல்

5. 2020/08/27 ஆந் திகதி சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற தரத்துடன் கூடிய தேங்காய் எண்ணெய் பொருட்டு அதிகார சபையால் அறிமுகப்படுத்தியுள்ள இலட்சினை வெளியிடல் தொடர்பாக ஊடகத்தை அறிவுறுத்தும் நிகழ்ச்சியில் பங்குகொள்ளுதல்.

6. பி.பி.சி நிறுவனத்தில் உள்ள RBD முறைமை தொடர்பான புலனாய்வு நடவடிக்கைகளின் பொருட்டு 2020/10/12 ஆந் திகதி பங்கு கொள்ளுதல்.

**தர நிருவாகப் பிரிவின் மொத்த முன்னேற்றம் மற்றும் வருமானம் ஈட்டல்**

2020 ஆம் ஆண்டிற்குள் மொத்த மாதிரிகள் 14,734 இனைப் பரிசோதித்துள்ளதோடு 59,793 மாதிரிகளுக்கு பரிசோதனைகள் நடாத்தப்பட்டன. வருடாந்த வருமானம் ஈட்டல் ரூ. 17.53 மில்லியன் ஆகும்.

## 3. விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

தெங்கு அபிவிருத்தி அதிகார சபையால் நடைமுறைப்படுத்திய திட்டங்களை எய்துக்கொள்வதற்காக ஆண்டு முழுதும் தொடர்ச்சியாக தமது பங்களிப்பை வழங்கிய விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி பிரிவு தெங்கு கைத்தொழில் துறையில் விளைவுத்திறனை அதிகரிப்பதற்காக பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றியுள்ளது. அவ்வாறு நிறைவேற்றப்பட்ட பின்வரும் பிரதான கடமைகளில் தெங்கு அபிவிருத்தி துறையின் விளைவுத் திறனை அதிகரித்துக்கொள்வதற்கு பங்களிப்பு வழங்கியுள்ளது. இதன் மூலம் 2020 ஆம் ஆண்டில் இறுதியாகும்போது இலங்கையில் தெங்கு கைத்தொழிலின் ஏற்றுமதி வருமானம் கோவிட் நிலைமையின் மத்தியிலும் எதிர்வுகூறல்களை விஞ்சி கூடிய பெறுமதியை அண்மித்துக்கொள்வதற்கு இயன்றுள்ளது. அது இது வரை பதிவு செய்யப்பட்ட அதிகூடிய ஏற்றுமதி வருமானமாக ரூபா. பில்லியன் 123 அதாவது ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன் 661 வரை மேலும் விருத்தி செய்து கொள்வதற்கு முடிந்தமையானது, தெங்கு சார்ந்த ஏற்றிமதி துறையின் மிக விசேட வெற்றியாகும். இதன்போது எமது சேவைபெறுநர்கள் அடங்கலாக தெங்கு கைத்தொழில் துறையின் பல்வேறு தரப்புகளின் வளர்ச்சிக்கு சாதகமான சந்தை தகவல்கள் மற்றும் தரவுகள், கொள்வனவாளர்கள், விற்பனையாளர்கள் கண்டறிவதற்கான சேவைகளையும் புதிய சந்தை செல்நெறிகள் தொடர்பான தகவல்களையும், ஏனைய சேவைகளை வினைத்திறனாகவும் வழங்குவதற்கு விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு 2020 ஆம் ஆண்டில் விசேட கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றியுள்ளது.

2020 ஆம் ஆண்டின் செயற்றிட்டத்தின்படி முன்னெடுக்கப்பட்ட பிரதான பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- தெங்கு சார்ந்த உற்பத்திக்காக சர்வதேச புதிய சந்தைகள் மற்றும் கொள்வனவாளர்களை அடையாளம் காணுவதன் மூலம் தெங்குக் கைத்தொழிலின் ஏற்றுமதி வருமானத்தை விருத்தி செய்யும் நோக்குடன் தும்பு நார் மற்றும் செய்கை முறைகள் தொடர்பில் ஜேர்மனில் எசன்சில் நடைபெற்ற IPM கண்காட்சியில் ஏற்றுமதியாளர்கள்/ உற்பத்தியாளர்கள் ஆகியோருக்கு அனுசரணை வழங்கப்பட்டு அவர்களுடன் தெங்கு அபிவிருத்தி அதிகார சபை விற்பனை மேம்பாட்டு நிகழ்ச்சியில் கலந்துகொண்டதுடன், இதன்போது சர்வதேச சந்தையில் தெங்கு நார் சார்ந்த உற்பத்திகளின் ஏற்றுமதிக்காக புதிய வாய்ப்புகளை அடையாளம் காணும் நோக்கில் B2B கலந்துரையாடல் அமர்வுகளை நடாத்தப்பட்டது.
- தெங்கு தொழிற் துறையினை மேற்பார்வை செய்தல் மற்றும் வசதிகளை அமைத்துக் கொடுத்தல் – ஏற்றுமதியாளர்கள், வர்த்தகர்கள், தேங்காய் தோட்டங்கள் மற்றும் இடைத்தரகர்களின் பதிவு.
- தெங்கு மற்றும் இளநீர் ஏற்றுமதி உயர் தரத்துடன் சர்வதேச சந்தையின் தேவைகளுக்கேற்ப நிறைவேற்றுவதற்கு அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் மற்றும் இத் துறையில் பிரவேசிப்பதற்கு எதிர்பார்க்கின்ற முதன்மை தொழில்முயற்சியாளர்களின் பொருட்டு தற்காலிக ஏற்றுமதிக்காக அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்.
- தெங்கு சார்ந்த ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மேற்பார்வை பணிகளை மேற்கொள்ளல்.
- வர்த்தகப் பிணக்குகளைத் தீர்த்தல்.
- தேங்காய் மற்றும் கொப்பறா ஏல விற்பனையினை நடாத்துதல்.
- நாளாந்தம் தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த சந்தை வலை கணக்குகளை வகைகளை பத்திரிக்கைக்கு வழங்குதல்.
- தெங்கு சார்ந்த உற்பத்தி, ஏற்றுமதி / இறக்குமதி அளவு, ஏல விற்பனை விலைகள், உலக சந்தையில் தெங்கு சார்ந்த விலைகளை உள்ளடக்கி வாராந்த அறிக்கை, மாதாந்த அறிக்கை மற்றும் 2019 ஆம் ஆண்டிற்காக இலங்கை தெங்கு புள்ளிவிபர அறிக்கையை வெளியிடல்
- உள்நாட்டுக் கல்வி மற்றும் வர்த்தகக் கண்காட்சியில் பங்கேற்பதன் மூலம் சூழலுக்கு உகந்த தெங்கு சார்ந்த கைத்தொழில் தொடர்பில் பொது மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை அறிவுறுத்தல்.
- பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, வணிகத் திணைக்களம், வெளி நாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் வர்த்தக ஒப்பந்தங்களுக்காக கலந்துரையாடல்களில் பங்கேற்றல் மற்றும் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்
| | தரச் சான்றிதழ்கள் | | 1,666,927 | |
| | உலர்த்திய தேங்காய் மாதிரிகள் மற்றும் பரிசோதனை கட்டணங்கள் - (உலர்த்திய) | | 8,996,305 | |
| | பரிசோதனை கட்டணங்கள் - தேங்காய் நார் உற்பத்தி | | 2,850,095 | |
| | பரிசோதனை கட்டணங்கள் - தேங்காய் பால் உற்பத்தி | | 356,432 | |
| | பரிசோதனை கட்டணங்கள் - தேங்காய் எண்ணெய் | | 2,004,883 | |
| | நீர் மாதிரி கட்டணங்கள் | | 211,189 | 16,085,831 |
| | | | | **16,085,831** |
| | | | | |
| 6 | **பல்வேறு வருமானம்** | | | |
| | **ஜி பி ஓ** | | | |
| | பெறுகை வைப்புகள் | | | |
| | துண்டு பிரசுரங்களின் விற்பனை | | 82,984 | |
| | பயிற்சி வருமானம் | | 663,890 | |
| | வாகன வாடகை கட்டணங்கள் | | 35,744 | |
| | ஏற்றுமதி - மீள அனுப்புதல் மீது கட்டணங்கள் | | 368,204 | |
| | சிறு வருமானங்கள் | | 742,016 | |
| | என் ஆர் அய் நிதியத்திடம் மாற்றுதல் | | 188,197 | |
| | லேபல் புத்தகங்கள் மற்றும் ஸ்டிகர் கட்டணங்கள் | | 2,258,392 | **4,339,426** |
| | | | | |
| | | | | |
| 7 | **துன்கன்னாவ மோர்டன் ஆலை** | | | |
| | நார் மற்றும் நார் விற்பனை | | | |
| | **கழித்தல் செலவினம்** | | | 512,196 |
| | சம்பளம் மற்றும் வேதனம் | 881,075 | | |
| | ஊ.ந.பொ.நி மற்றும் ஊ.சே நிதியம் | 274,112 | | |
| | காப்புறுதி | 5,468 | | |
| | தொலைபேசி கட்டணங்கள் | 22,295 | | |
| | மின்சாரம் | 126,627 | | |
| | ஏனைய செலவினம் | 14,331 | (1,323,908) | (1,323,908) |
| | | | | |
| | | | | |
| | **துன்கன்னாவ தெங்கு ஆலை** | | | |
| | தேங்காய் விற்பனை | | | 2,936,344 |
| | **கழித்தல் செலவினம்** | | | |
| | சம்பளம் மற்றும் வேதனம் | 1,181,449 | | |
| | ஊ.ந.பொ.நி மற்றும் ஊ.சே நிதியம் | 367,562 | | |
| | தேங்காய் பறித்தல் மற்றம் போக்குவரத்து செலவின | 467,915 | | |
| | மினசாரம் | 7,741 | (2,024,667) | (2,024,667) |
| | | | | **99,965** |
| | | | | |
| | | | | ரூபா |
| 8 | **தயாரிப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்** | | | **27,307,750** |
| | | | | |
| 9 | **விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள்** | | | **9,436,712** |
| | | | | |
| 10 | **தரக் கட்டுப்பாடு மற்றும் தரச் சான்றிதழ்** | | | **415,736** |

2020.12.31 **ஆந் திகதியில் உலர்த்தப்பட்ட ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கிய சேவைகள்**

| ஆலை இலக்கம் | | 2018.:2019 | 2020 | 2020 நீர் மாதிரி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| M 62 | டெசிகோ லங்கா தனியார் கம்பெனி, கனேவத்தை மில்ஸ், நிக்கதளுபொத்த | | 72,500.00 | | 72,500.00 |
| M 64 | ரத்சகரச்சி திசிந்தி மற்றும் தேங்காய் எண்ணெய் ஆலை, மாஸ்பொத்த | 31,852.50 | 86,250.00 | 12,320.00 | 130,422.50 |
| M 67 | மாரவில ப.கூ சங்கம் மாரவில | | 57,500.00 | | 57,500.00 |
| M 69 | பட்டுவத்தை டி.சீ.மில்ஸ் தனியார் கம்பெனி | | 142,500.00 | | 142,500.00 |
| M 71 | மாதம்பே மில்ஸ் தனியார் கம்பெனி, தம்பகல்ல, காக்கபள்ளிய | 61,250.00 | | | 61,250.00 |
| M 72 | புனித ஜோஸப் டி சீ மெனுபக்சர்ஸ் தனியார் கம்பெனி, கொழும்பு வீதி வடினாபஹ | | 40,000.00 | | 40,000.00 |
| M 75 | சிரியாங்கனி டி சீ அண்ட் பயிபர் மில்ஸ், கிரிஉல்ல வீதி, கட்டான | | 216,250.00 | 11,164.00 | 227,414.00 |
| M 76 | மில்ஸ், லோலுவகொட | 16,250.00 | 35,000.00 | | 51,250.00 |
| M 77 | சென்ட் என்ஸ் பக்டரி, தளுவ , மாம்புரிய | 32,500.00 | 82,500.00 | | 115,000.00 |
| M 79 | ரேனுகா அக்ரி ஓர்கனிக் தனியார் கம்பெனி | | 60,000.00 | | 60,000.00 |
| M 80 | துனகஹ ப.கூ சங்கம் கெஹெல்எல்ல மில்ஸ், படல்கம | | 10,000.00 | | 10,000.00 |
| M 84 | பொத்தேவெல டி சீ அண்ட் ஒயில் மில்ஸ் , மீரிகம வீதி, பாந்துராகொட | | 55,000.00 | | 55,000.00 |
| M 85 | விச்சி ப்ளான்டேஷன் தனியார் கம்பனி | 15,000.00 | 96,250.00 | | 111,250.00 |
| M 86 | ஜே பீ எம் பின்டோ மற்றும் கம்பெனி, புதிய வீதி, வென்னப்புவ | | 35,000.00 | | 35,000.00 |
| M 87 | சென்ட் வெலன்டயின் டி சீ பெக்டரி | | 12,500.00 | | 12,500.00 |
| M 88 | சொனிக் எக்ஸ்போ தனியார் கம்பெனி | 110,162.00 | 78,750.00 | | 188,912.00 |
| M 89 | குடாவெவ மில்ஸ், குடாவெவ | 23,384.00 | 53,750.00 | | 77,134.00 |
| M 90 | நெதுன்கமுவ மில்ஸ், நெதுன்கமுவ | | 22,500.00 | | 22,500.00 |
| M 91 | சந்தலங்கா டி சீ மில்ஸ் | | 111,250.00 | | 111,250.00 |
| M 93 | கிரின் பார்ம் மில்ஸ், கலுஅரிப்புவ கட்டான | 54,658.15 | 72,500.00 | | 127,158.15 |
| M 94 | சிரிகத்த டி சீ மில்ஸ் , கொச்சிகடே | | 33,750.00 | | 33,750.00 |
| M 95 | சீ பீ எல் கொகொஸ் தனியார் கம்பெனி, கொழும்பு வீதி, அலவ்வ | 37,500.00 | 56,250.00 | | 93,750.00 |
| M 98 | செரன்டிப் சுபர் புட் தனியார் கம்பெனி | 18,414 | 152,500 | | 170,914 |
| M 102 | என் எம் கே கொகோ லாண்ட் தனியார் கம்பெனி | 66,250 | | | 66,250 |
| M 102 | நாரா கொகோ லாண்ட்ஸ் | 5,435 | - | | 5,435 |
| M 103 | சென்ட் தெரேஸா மில்ஸ் , கட்டான | | 198,750 | | 198,750 |
| M 105 | டி வய் அண்ட் டி யு ராஜபக்ஷ தனியார் கம்பெனி, ஹேனேகம டி சீ மில்ஸ் | | 78,750 | | 78,750 |
| M 107 | சந்திரா டி சீ மில்ஸ், கந்தவல, கட்டான | | 16,250 | | 16,250 |
| M 110 | ரேனுகா எக்ரி ஓர்கனிக் தனியார் கம்பெனி, உனகஹதெனிய | | 133,750 | | 133,750 |
| M 111 | குடியிருப்பு தெங்கு உற்பத்தி கம்பெனி | | 51,250 | | 51,250 |
| M 113 | பெலும்மஹர டி சீ மில்ஸ், பெலும்மஹர, முதுன்கொட | | 110,000 | | 110,000 |
| M 114 | நாத்தண்டிய மில்ஸ் | 21,250 | 71,250 | | 92,500 |
| M 115 | போகமுவ டி சீ மில்ஸ், அளுத்கம, போகமுவ, அளுத்கம | 8,474 | | | 8,474 |
| M 119 | மாதம்மன டி சீ மில்ஸ், மினுவன்கொட | | 96,250 | | 96,250 |
| M 120 | பாதிமா டி சீ அண்ட் ஒயில் மில்ஸ், நயினமடம் | | 80,000 | | 80,000 |
| M 122 | சென்ட் ஜோசப் டி சீ அண்ட் பயிபர் மில்ஸ் கட்டான | | 65,000 | | 65,000 |
| M 126 | லக்ஷ்மி டி சீ மில்ஸ், பட்டகந்த, படல்கம | 14,962 | 181,250 | | 196,212 |
| M130 | போயகனே டி சீ மில்ஸ் தனியார் கம்பெனி, போயகனே , குருணாகல் | 46,250 | 21,250 | 12,088 | 79,588 |
| M 131 | ஜயகொடி மில்ஸ் தனியார் கம்பெனி, நாத்தண்டிய வீதி, தன்கொட்டுவ | 14,503 | 26,250 | | 40,753 |
| M 132 | ஏஷியன் அக்ரோ ப்ரோடக்ட்ஸ் தனியார் கம்பெனி | 6,250 | 88,750 | 11,214 | 106,214 |
| M 133 | உபாலி டி சீ மில்ஸ், தலவில மாரவில | 6,250 | | | 6,250 |
| M 134 | குணவர்தன டி சீ மில்ஸ், கலவத்த, கட்டான | 4,254 | 42,500 | | 46,754 |
| M 136 | வெல்வின் டி சீ மில்ஸ் மினுவன்கொட | 38,600 | 31,250 | | 69,850 |
| M 139 | சங்ஹிந்த டி சீ மில்ஸ் தனியார் கம்பெனி | | 55,000 | | 55,000 |
| M 144 | ஜ்வானி டி சீ மில்ஸ் நீர்கொழும்பு | | 80,000 | | 80,000 |
| M 145 | துனகஹ ப.கூ சங்கம் துனகஹ | 5,000 | 23,750 | | 28,750 |
| M 148 | ஆர் எம் பீ கொகனட் ப்ரோடக்ட்ஸ் , தனியார் கம்பெனி | | | 11,146 | 11,146 |
| M 149 | மாவிக்செல் இன்டர்நெஷனல் தனியார் கம்பெனி | | 203,750 | 13,560 | 217,310 |
| M 150 | என் டி சீ எக்ஸ்போர்ட் தனியார் கம்பெனி | | 21,250 | | 21,250 |
| M 151 | வயம்ப டி சீ அண்ட் ஒயில் மில்ஸ் தனியார் கம்பெனி | | 62,500 | | 62,500 |
| M 152 | சன்மிக் புட்ஸ் தனியார் கம்பெனி | 17,240 | 75,000 | | 92,240 |
| M 153 | நாவிக் மில்ஸ் தனியார் கம்பெனி | | 65,000 | | 65,000 |
| M 156 | வி எஸ் எஸ் ப்ரோடக்ட்ஸ் தனியார் கம்பெனி | | 11,250 | | 11,250 |
| | | **655,689** | **3,472,500** | **71,492** | **4,199,681** |

**2020.12.31. ஆந் திகதியில் கடனாளிகள் - புதிய தேங்காய், கொப்பறா இருப்புகளின் கட்டணங்கள் மற்றும் தேங்காய் பால் உற்பத்தி**

| கொப்பறா | தொகை ரூபா | | தேங்காய் பால் உற்பத்தி | |
|---|---|---|---|---|
| | | | | |
| **கொப்பறா இருப்புகளின் கட்டணம்** | | | பெயர் | தொகை ரூபா |
| சீ அண்ட் ஜே மெதிவ் மற்றும் தனியார் கம்பெனி | 39,919 | | பயோ புட்ஸ் தனியார் கம்பெனி | - |
| எல் எஸ் ரீ டீ எஸ் விஜேரத்ன மற்றும் கம்பெனி | 8,995 | | சீ.பி.எல்.க்லோபல் புட் லிமிடெட் | 6,000 |
| | | | கொன்சொலிடேட்ட் பிஸ்னஸ் சிஸ்டம்ஸ் | 18,000 |
| **புதிய தேங்காய் ஏலவிற்பனை கட்டணங்கள்** | | | ஜாயந்தி எக்ஸ்போர்ட் தனியார் கம்பெனி | 6,000 |
| தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபை | 182,958 | | கந்தேகெட்டிய எக்ரோ ப்ரோடக்ட்ஸ் | 6,000 |
| சிலாபம் பெருந்தோட்ட கம்பெனி | 12,377 | | மஞ்சி டி கொகோ ப்ரோடக்ட்ஸ் | 18,000 |
| தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் | 10,878 | | மாஸ் ட்ரொபிகள் புட் ப்ரோசெசின் தனியார் கம்பெனி | 18,000 |
| தெங்கு பயிர்ச் செய்யும் சபை | 113,694 | | நாரா கொகொ லாண்ட் தனியார் கம்பெனி | 18,000 |
| திருமதி பீ.பீ. குணசேகர | (3,612) | | என் டீ சீ எக்ஸ்போர்ட்ஸ் தனியார் கம்பெனி | 18,000 |
| லாலன் இறப்பர் தனியார் கம்பெனி | 39,542 | | நெக்ஸ்போ கன்வர்ஷன் தனியார் கம்பெனி | 6,000 |
| குருணாகல் பெருந்தோட்ட கம்பெனி | 47,558 | | ரேனுகா எக்ரி புட் பீ எல் சீ | 18,000 |
| எல்கடுவ பெருந்தோட்ட கம்பெனி | 111,989 | | சில்வர் மில் நெச்சுரல் பெவரேஜஸ் | 6,573 |
| எச்.எல்.டி மெல் மற்றும் தனியார் கம்பெனி | 46,748 | | சன்மிக் புட்ஸ் தனியார் கம்பெனி | 18,000 |
| திரு சீ தீபால் மெதிவ் | 1,398 | | வகுருவெல ஓயில் மில்ஸ் | 6,000 |
| பொல்கனத்தே வத்தை | 252 | | விச்சி பெருந்தோட்ட கம்பெனி | 573 |
| திக்லந்த தோட்டம் | 2,340 | | | **163,145** |
| வயிக்ரோ தனியார் கம்பெனி | 289 | | | |
| மெதகம்பளை தோட்டம் | 389 | | | |
| தெல்ஹேன தோட்டம் | 778 | | | |
| **மொத்தம்** | **616,490** | | | |
| **மேலதிகமாக செலுத்தப்பட்ட இருப்புகளின் கட்டணம்** | | | | |
| ஆர் எம் மெல் | (2,652) | | | |
| கனேகந்த தோட்டம் (ஜனவசம) | (102) | | | |
| மில்லேவாகன தோட்டம் | (9,961) | | | |
| ராகெதர பத்தல் கம்பெனி | (1,209) | | | |
| மார்சந்தவில தோட்டம் | (218) | | | |
| ராத்தேகொட தோட்டம் | (800) | | | |
| **மொத்தம்** | **(14,942)** | | | |

# 6. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

2020 ஆம் ஆண்டுக்கு உரியதாக உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்கள் அதிகார சபையின் செயற்பாட்டுப் பிரிவான தயாரிப்பு அபிவிருத்திப் பிரிவு, சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் பொருளாதார ஆராய்ச்சிப் பிரிவு உட்பட தர நிருவாக மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவின் செயற்பாட்டுத் திட்டத்தை தழுவக்கூடியவாறு மற்றும் அதற்கு மேலதிகமாக நிருவாகப் பிரிவு மற்றும் நிதிப் பிரிவுகளுக்கிடையிலான செயற்பாடுகளைத் தழுவக்கூடிய வகையில் கணக்காய்வாளர் திணைக்களம் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் தலைவரது ஆலோசனைகளுக்கு அமைய வகுத்து அமுல்படுத்தப்பட்டது.

இதற்கமைய அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டங்களுக்கு ஏற்றவாறு கணக்காய்வு பரிசோதனைகளை மேற்கொண்டு 12 அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. முகாமைத்துவத்தினால் பொறுப்பளிக்கப்பட்ட விசேட புலனாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதுடன், விசாரனைகளுக்குரிய சகல அறிக்கை ஆண்டுக்குள் மேற்கொண்டு முகாமைத்துவத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 6.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை

### 6.1.1 அமைப்பு மற்றும் குறை நிறைவெண்

அரச நிறுவனங்களின் சிறந்த நிருவாகத்திற்குரிய வழிகாட்டல்ஆலோசனைக் கையேடு என்ற 2003.06.02 ஆம் திகதிய அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் PED/12இல் 4.7.1 கொண்ட அத்தியாயம் மற்றும் 2010.12.04 ஆம் திகதிய அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் PED/55 இற்கமைய தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினைத் தாபித்து அச் சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய இக்குழுவின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு சபை நிறைவேற்று அல்லாத மூன்று பணிப்பாளர்களைக் கொண்டு அமைந்துள்ளது. மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் 4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களை நடாத்தப்பட்டுள்ளதுடன், பின்வரும் உறுபினர்களைக் கொண்டு குழு ஒழுங்கமைந்துள்ளது.

2020.06.02 ஆம் திகதி நடைபெற்ற 2020/01கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம்

1. திரு. என்.எஸ் வணசிங்க - அமைச்சின் பிரதிநிதி - குழுத் தலைவர்
2. திருமதி. அய்.டி.நிமேஷா மென்டிஸ் (திறைசேரி பிரதிநிதி - அங்கத்தவர்
3. திரு. பிரியலத் கிம்பிஹெட்டி கே - அங்கத்தவர்
4. திரு.உபாலி தம்மிக த சில்வா - உறுப்பினர்

2020.08.06 ஆம் திகதி நடைபெற்ற 2020/02 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம்

1. திரு. என்.எஸ் வணசிங்க - அமைச்சின் பிரதிநிதி - குழுத் தலைவர்
2. திருமதி. அய்.டி.நிமேஷா மென்டிஸ் (திறைசேரி பிரதிநிதி - அங்கத்தவர்
3. திரு. பிரியலத் கிம்பிஹெட்டி கே - அங்கத்தவர்
4. திரு.உபாலி தம்மிக த சில்வா - உறுப்பினர்

2020.10.26 ஆம் திகதி நடைபெற்ற 2020/03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் (zoomதொழில்நுட்பம் ஊடாக நடாத்தப்பட்டது.)

1. திரு. என்.எஸ் வணசிங்க - அமைச்சின் பிரதிநிதி - குழுத் தலைவர்
2. திருமதி. அய்.டி.நிமேஷா மென்டிஸ் (திறைசேரி பிரதிநிதி - அங்கத்தவர்
3. திரு. பிரியலத் கிம்பிஹெட்டி கே - அங்கத்தவர்
4. திரு.உபாலி தம்மிக த சில்வா - உறுப்பினர்

2020.12.10 ஆம் திகதி நடைபெற்ற 2020/04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம்

1. திரு. என்.எஸ் வணசிங்க - அமைச்சின் பிரதிநிதி - குழுத் தலைவர்
2. திருமதி. அய்.டி.நிமேஷா மென்டிஸ் (திறைசேரி பிரதிநிதி - அங்கத்தவர்
3. திரு. பிரியலத் கிம்பிஹெட்டிகே - அங்கத்தவர்
4. திரு.உபாலி தம்மிக த சில்வா உறுப்பினர்

கணக்காய்வாளரின் பிரதிநிதி 2020 ஆம் ஆண்டில் நடைபெற்ற எல்லா கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களில் பங்குபற்றினார்.பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், அனைத்து கூட்டத்திலும் பங்கேற்றுள்ளார். குழுவில் முகாமைத்துவத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கத்தவர்கள் எவரும் இல்லை. பணிப்பாளர் நாயகத்தின்அழைப்பிற்கு அமைய கூட்டத்திற்காக பங்கேற்க நடவடிக்கை எடுக்கப்படும். முகாமைத்துவத்தின் ஏனைய அங்கத்தவர்களின் பங்கேற்பு குழுவிற்குத் தேவையான வேளையில் கூடுவதற்காக பங்கேற்பதற்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது. குழுவின் குறை நிறைவெண் 03 அங்கத்தவர்களாகும்.

6.2 குழுவின் செயற்பாட்டுப் பொறுப்புக்கள்

- இறுதிக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்ட அறிக்கையினை மீளாய்விற்கு உட்படுத்தி குழுவின் ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை உரியவாறு அமுல்படுத்துவது தொடர்பாகக் கண்டறிதல்.

- மாதிரி மற்றும் உள்ளடக்கத்தை மீளாய்விற்கு உட்படுத்தவும் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் நிதி அறிக்கைப்படுத்தும் முறையின் நம்பகத் தன்மையினை மேற்பார்வைக்கு உட்படுத்தல்.

- உள்ளக மற்றும் வெளிக் கணக்காய்வுப் பணிகளில் விடய மூல அம்சம் மற்றும் பயனை உறுதிப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள செயற்பாடுகளின் ஒழுங்கமைவு மற்றும் ஆய்வுளை மேற்கொள்ளல்.

- உள்ளக நிருவாகத்தின் தகைமை மற்றும் வெற்றியினை மீளாய்விற்கு உட்படுத்தலும் பரிந்துரைகளைச் சமர்ப்பித்தலும்.

- உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள், வெளிக் கணக்காய்வுகள் மற்றும் அதற்காக முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளை மீளாய்விற்குட்படுத்தல்.

- மேற்பார்வை மற்றும் நிதி அறிக்கைப்படுத்தலின் தேவைகளுடன் உட்படல் மற்றும் உரிய மேற்பார்வையினை அதிகார சபையிடம் காணப்படும் இணைப்பினை உறுதிப்படுத்தக் கூடிய ஒழுக்க விழுமியங்கள், தரங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் மீளாய்விற்கு உட்படுத்தவும் பரிந்துரைகளைச் சமர்ப்பித்தலும்.

6.3 **கூட்டங்கள் மற்றும் செயற்பாடுகள்**

மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் நான்கு (04) தடவைகள் குழுக்கூட்டங்கள் நடாத்தப்பட்டன. குழுக் கூட்டத்திற்காக குழுவின் அங்கத்தவர்களின் சமூகமளிப்பு கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் குழுவினால் கீழ்க் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டன.

### 6.3.1 உள்ளகக் கணக்காய்வு

- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின்செயற்பாடுகளுக்கு உரியதாக 2020 ஆம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் திணைக்களத்தின் பரிந்துரைகளைக் கருத்திற் கொண்டு தயாரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு வேலைத் திட்டங்கள் மற்றும் கணக்காய்வுத் திட்டங்களை கலந்துரையாடலுக்கு உட்படுத்தி தொடர்ந்தும் கணக்காய்விற்கு உட்படுத்த வேண்டிய துறைகள் தொடர்பாக ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் கணக்காய்வு வேலைத்திட்டங்கள் உட்பட கணக்காய்வுத் திட்டங்களை சபையின் அங்கீகாரத்திற்காக பரிந்துரை செய்தல்.
- 2020 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்களை அமுல்படுத்தும் போது உற்பத்தித் திறன் மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்டது.
- உள்ளகக் கணக்காய்வு விசாரணைகளுக்கு விடையளிப்பதில் உள்ள முன்னேற்றத்தின் மதிப்பீடு.
- எதிர்காலத்தில் மீண்டும் சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுக்கும் வகையில் சமகால திருத்தச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்குடன் விசேட உள்ளகக் கணக்காய்வு தேடல்கள் மற்றும் அவற்றிற்காக முகாமைத்துவத்தின் வரவேற்பு மீளாய்விற்கு உட்படுத்தப்பட்டது.

### 6.3.2 வெளியகக் கணக்காய்வு

- 2019.12.31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தொடர்பிலான கணக்காய்வுத் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வுகளுக்கு உரியதாக முகாமைத்துவத்தினால் வழங்கப்பட்ட பதில்கள் மீளாய்விற்கு உட்படுத்தப்பட்டதுடன், விசேடமாகக் காண்பிக்கப்பட்ட பிரச்சினைகள் மீண்டும் எழுவதைத் தடுக்கும் வகையில் முகாமைத்துவத்தினால் முன்னெடுக்கப்பட்ட திருத்தியமைக்கும் செயற்பாடுகள் தொடர்பாக பின்னூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டன. 2019.12.31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தில் 12 ஆவது பிரிவு பிரகாரம் அறிக்கை மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக குழுவால் கவனம் செலுத்தியுள்ளதுடன், குறித்த விடயங்களுக்கு ஏற்புடையதாக மேற்கொண்டுள்ள நடவடிக்கை தொடர்பான பின்னூட்டல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 6.3.3 நிதி அறிக்கைப்படுத்தல்

- வருடாந்த கணக்காய்விற்கு உட்பட்ட நிதி வெளிப்பாட்டு மேற்பார்வை மற்றும் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபையினால் பணிக்கப்படட் தேவைகள் மற்றும் உரிய கணக்கீட்டுத் தரங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தும் போது சபைக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

### 6.3.4 கூட்ட அறிக்கை / சபையின் அறிக்கைப்படுத்தல்கள்

- குழுவின் நிலைப்பாடுகள் தொடர்பாக பொருத்தமான கூட்ட அறிக்கை சபை செயலாளர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்படுகின்றது. கூட்டங்களின் சகல அறிக்கைகளும் சபையில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் , பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் அங்கீகரிக்கப்பட்டு குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை அமுல் படுத்துவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்படும். கிரமமான அடிப்படைக்கு அமைய மிக முக்கியமான விடயங்கள் தொடர்பில் பின்னர் நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படும் அதிகார சபையின் ஒப்பீட்டுக் கோட்பாடுகள் மற்றும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் மற்றும் தடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பிலும் பின்னூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| பணிப்பாளரின் பெயர் | பங்கேற்றோர்களின் எண்ணிக்கை |
|---|---|
| திரு. என்.எஸ் வணசிங்க | 04 |
| திருமதி. அய்.டி.நிமேஷா மென்டிஸ் | 04 |
| திரு. பிரியலத் கிம்பியஹெட்டிகே | 04 |
| திரு.உபாலி தம்மிக த சில்வா | 04 |

அட்டவணை 31 குழு உறுப்பினர்களின் வருகை

# ජාතික විගණන කාර්යාලය
# தேசிய கணக்காய்வு அலுவலகம்
# NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය எனது இல. My No. PLA/DCDA/01/20/19 ඔබේ අංකය உமது இல. Your No.

දිනය திகதி Date 2021 ஒக்டோபர் 14 ஆந் திகதி

தலைவர்,

தெங்கு அபிவிருத்தி அதிகார சபை

**தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் மற்றும் ஏனைய சட்டத்துடனான ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை**

---

## 1. நிதிக் கூற்றுகள்

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரை பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, அதிகார சபையின் நிதிக் கூற்றுகள் ஊடாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலும் காசுப்பாய்ச்சலும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமம் 01 இல் 24 ஆவது பந்தி பிரகாரம், அமைப்புகள் வரவு செலவிடப்பட்ட தொகை மற்றும் உண்மையான தொகை வெவ்வேறாக அறியும் வகையில் நிதிக் கூற்றுகளில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமாயினும், மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் அவ்வாறு வரவு செலவிடப்பட்ட தொகை உள்ளடக்கப்படவில்லை.

(ஆ) முற்றுமுழுதாக தேய்மானம் செய்திருந்த செலவினம் ரூபா. 1,337,550 ஆன 65 இயந்தி உபகரணங்களை பயன்படுத்தப்படினும், குறித்த சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் தொடர்பான மதிப்பிடப்பட்ட வழு இலங்கை இலங்கை பொது துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இற்கு அமைவாக மீண்டும் திருத்தம் செய்வதற்கு நிதிக் கூற்றுகளில் சீராக்கல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) சபைக்குரியதான துன்கன்னாவ தும்புநார் அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்தின் ரூபா.1,008,348 ஆன செலவினம் 2019 ஆம் ஆண்டில் பொருத்தப்பட்ட பெட்டிகுட்டம் இயந்திரம் அடங்கலாக இயந்திர உபகரணங்கள் கணினிகள் மற்றும் தளவாடங்கள் மூலதனமயப்படுத்தாது அந்தந்த ஆண்டுகளில் மீண்டுவரும் செலவினமாக பதிவழிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக நிதிக் கூற்றுகளில் சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி அத் தொகையில் குறைவாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 35 ஆண்டு காலம் தொடக்கம் பி.சீ.சீ. லங்கா கம்பெனியிடமிருந்து கிடைக்கப்பெற வேண்டிய ரூபா.26,715,0378 ஆன கடன் மீதிகளின் பொருட்டு வருடாந்தம் ரூபா.4,011,609 என்ற வகையில் வட்டி வருமானம் கணக்கிடப்பட்டு அதனை பெற்றுக்கொள்வதில் நிச்சயமற்ற நிலைமை காரணமாக அப் பெறுமதி சந்தேகத்திற்கிடமான கடனாகவும் ஒதுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக நிதிக் கூற்றுகளில் அறியதருவதற்கும், கடன் மீதியின் பொருட்டான இழப்பீட்டு பெறுமதிக்கு தேவையான சீராக்கல்களை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(உ) நிலையான பதிவேட்டில் உள்ளடக்கியுள்ள 2005 மற்றும் 2006 ஆகிய ஆண்டுகளில் கொள்வனவு செய்து முற்றுமுழுதாக தேய்மானம் செய்திருந்த செலவினம் ரூபா.3,363,900 ம் பெறுமதியான 39 இயந்திர உபகரணங்கள் முன்னோடி கருத்திட்டங்களின் பொருட்டு வழங்கியதாக கணக்காய்விடம் விடயங்களை சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், சம்ந்தப்பட்ட கருத்திட்டங்களில் விபரங்களை அனுப்பாமை காரணமாக குறித்த சொத்துக்களின் பௌதீக இயல்பு தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியவில்லை. அதேபோன்று குறித்த சொத்துக்களை

ஒப்பாய்வு செய்து பொருத்தமான வகையில் அகற்றுவதற்கு அல்லது மீள்கணிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படபவில்லை.

(ஊ) 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் பௌதீக இருப்புகளின் ஒப்பாய்வு மேற்கொண்டிருந்த போதிலும், குறித்த பௌதீக தொகையின் பறுமதிக்குப் பதிலாக இருப்புகளின் புத்தகங்களின் படி இருந்த தீதியான ரூபா.26,351,915 ஐ நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. புத்தகங்களின் பிரகாரம் மீதியை பௌதீக ஒப்பாய்வு அறிக்கையுடன் மாதிரி பரிசோதனையில் ஆய்வுகூட உபகரணங்களின் இருப்புகளில் ரூபா.852,754 பெறுமதியான 101 இருப்பு அலகுகளின் பற்றாக்குறை காணப்பட்டதுடன், 375,412 ரூபா பெறுமதியான 49 அலகுகளின் மிகை காணப்பட்டது. மேலும், இருப்பு புத்தகங்களில் உள்ளடக்கப்படாத 1834 இருப்பு அலகுகள் காணப்பட்டமை காணரமாக நிதிக் 4ற்றுகளில் உள்ளடக்கியிருந்த இருப்புகளின் செவ்வைத்தன்மை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியவில்லை.

(எ) உலர்த்திய தேங்காய் ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கிய சேவைகளின் பொருட்டு உரயிவாறு இன்வொயிஸ் வழங்கப்படாமை, கடனாளிகளின் பேரேடு பராமரிக்கப்படாமை, பணம் அறவிடுவதற்க மற்றும் வங்கியில் நேரடியாக வரவு வைக்கப்படும் பணம் அடையாளம் காண்பதற்கு உரிய முறைமைகள் இல்லாமை ஆகிய விடயங்கள் காரணமாக மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் அறிவிடப்பட வேண்டுமென கணக்கு வைக்கப்பட்டிருந்த ரூபா.4,199,681 ஆன கடனாளிகளும் அதற்கு ஏற்புடையதாக மீளாய்விற்கான ஆண்டில் அடையாளம் காணப்பட்டிருந்த ரூபா.8,996,305 ஆன வருமானத்தில் செவ்வைத் தன்மை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் 2020 ஆண்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

---

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் 2020 ஆண்டு அறிக்கையில் உள்ளடக்கியுள்ள போதிலும், நிதிக் கூற்றுகள் மற்றும் அது தொடர்பாக எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்று பொருள்படுகிறது. இந்த ஏனைய தகவல்கள் பொருட்டு முகாமைத்துவம் பொறுப்பு கூறுதல் வேண்டும்.

நிதிக் கூற்றுகள் தொடர்பிலான எனது அபிப்பிராயத்தில், ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படுவதில்லை என்பதுடன், நான் அது தொடர்பாக எந்தவொரு வகையிலுமான சான்றுப்படுத்தலையோ அபிப்பிராயத்தையோ தெரிவிக்கமாட்டேன்.

நிதிக் கூற்றுகள் தொடர்பாக எனது கணக்காய்விற்கு அமைவாக, மேற்படி அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ள முடியுமானவிடத்து வாசித்தல் மற்றும் அவ்வாறு மேற்கொள்கையில் ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுகளுடன் அல்லது கணக்காய்வில் அல்லது வேறு வகையில் பெற்றுக்கொண்ட எனது அறிவு படி பொருண்மையாக பொருத்தமற்றதா என கவனத்தில் கொள்ளுதல் எனது பொறுப்பாகும்.

இந்த கணக்காய்வு அறிக்கையில் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்கள் மீது என்னால் மேற்கொண்ட பணிகளை அடிப்படையாகக்கொண்டு, இந்த ஏனைய தகவல்கள் பொருண்மையாக தவறான புரிதல் உள்ளதென நான் தீர்மானித்தால், குறித்த விடயங்களை நான் அறிவிக்கப்படுதல் வேண்டும். இது தொடர்பாக எதுவும் எனக்கு அறிக்கையிடுவதற்கு இல்லை.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகார சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகார சபைக்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படும் தரப்புகளை அறிவுறுத்தப்பட்டது.

## 2. ஏனைய சட்டத்துடனான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை

---

2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் பின்வரும் தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன், இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு உரிய நிதி அறிக்கைகள் நிறுவனத்தால் பேணப்பட்டிருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகார சபையில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் இவ் அறிக்கையில் 1.2(அ) மற்றும் (ஈ) முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தும், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே நிதியத்தால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் அதிகாரசபையின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதை குறிப்பிடுதல்.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் அதிகாரசபை இணங்கியொழுகாதுள்ளமையை குறிப்பிடுதல்.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிதியம் அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருக்காதமையை குறிப்பிடுதல்.

(அ) 2016-2019 ஆகிய காலப் பகுதிக்குள் பொதுவான வருடாந்த தேங்காய் எண்ணெய் உற்பத்தியான மெ.தொன்.29,287 இல் மெ.தொன் 5,516 ஐ ஏற்றுமதி செய்த பின்னர் உள்நாட்டு நுகர்விற்காக எஞ்சுகின்ற பொதுவான தேங்காய் எண்ணெய் தொகை மெ.தொன் 23,771 ஆயினும், உள்நாட்டு தேவை மெ.தொன் 93,103 ஆகியதால் பற்றாக்குறையான மெ.தொன் 69,332 இல், மெ.தொன் 5,044 ஐ இறக்குமதி செய்கின்ற தேங்காய் எண்ணெய் மூலமும், எஞ்சிய 69% ஐ

இறக்குமதி செய்கின்ற பார்ம் எண்ணெய் மூலமும், பெற்றுக்கொள்ளப்படுவதுடன், கடந்த 04 ஆண்டு காலப் பகுதிக்குள் பொதுவான பார்ம் எண்ணெய் இறக்குமதி மெ.தொன் 199,433 ஆக காணப்பட்டது. அதன் படி தரத்துடன் கூடிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாது, உள்நாட்டில் நுகர்வு செய்கின்ற தேங்காய் எண்ணெய் தேவையில் அதிகமான பகுதி பார்ம் எண்ணெய் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயைக் கொண்டு பூர்த்தி செய்து கொள்ளுதல் அதிகார சபையின் நோக்கங்களுக்கு ஒழுங்கமைவானதல்ல என்பதை அவதானிக்கப்படுகிறது.

(ஆ) 1975 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தம் செய்யப பட்ட் 1971 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி சட்டத்தில் 51 ஆவது பிரிவின் கீழ் வெளியிடப்பட்டிருந்த 1979 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதிய 69/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் முதலாவது அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ள 3 ஆவது பந்தி பிரகாரம், இலங்கையில் உற்பத்தி செய்கின்ற அல்லது இலங்கையில் ஏற்றுமதி செய்யப்படுகின்ற தேங்காய் உற்பத்திகளில் தரப் பண்பு நியமங்களை விதித்தல் மற்றும் பராமரித்தல் அதிகார சபை மேற்கொள்ள வேண்டுமாயினும், இலங்கையில் மொத்த தேங்காய் எண்ணெயின் நுகர்வில் 72% இற்காக தரப் பரிசோதனை மேற்கொள்ளவில்லை என்பதை அவதானிக்கப்பட்டது. அதேபோன்று தரத்துடன் கூடிய தேங்காய் எண்ணெய் உற்பத்திக்கான 05 நட்சத்திரங்களைக் கொண்ட இலட்சினை 2019 ஆம் ஆண்டில் 07 தேங்காய் எண்ணெய் ஆலைகள் மட்டும் பெற்றுக்கொண்டிருந்தன.

(இ) 1971 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் "உலர்த்திய தேங்காய்" கைத்தொழில் அபிவிருத்தியின் பொருட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்ற ஒவ்வொரு உலர்த்திய தேங்காய் கி.கி.1 பொருட்டு 20 சதவீதம் பிரகாரம் செஸ் நிதியத்திலிருந்து கிடைக்கப்பெறும் பணத்தொகை, அந்தந்த ஆலை உற்பத்தி உரிமையாளர்களின் பெயரில் வங்கி கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டு, ஆலைகளை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் 1980 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட ஆலை அபிவிருத்தி நிதியத்திலிருந்து மீளாய்விற்கான ஆண்டில் எந்தவொரு பணியும் மேற்கொண்டிக்கவில்லை என்பதுடன், கைத்தொழில்களை மேம்படுத்தும் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்விற்கான ஆண்டில் செஸ் நிதியத்திலிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா.5,916,064 அடங்கலாக ஆண்டு இறுதியில் திரட்டிய நிதியத்தின் கணக்கு மீதி ரூபா.84,206,686 ம், வங்கி வைப்புகளின் பெறுமதி ரூபா.160,835,956 ம் ஆகியது.

(ஈ) 1971 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி சட்டத்தின் அதிகாரங்களின் படி தேங்காய் எண்ணெய் அதிக அளவில் தொகையாக கொள்வனவு செய்து, விலை ஏற்ற இறக்கம் படி சந்தைக்கு வழங்குவதன் மூலம்

விலை கட்டுப்பாடுகளை மேற்கொள்ளும் நோக்கத்தில் தேங்காய் எண்ணெய் விலை நிலைபடுத்தல் நிதியம் தாபிக்கப்பட்டிருப்பினும், 1981 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த நிகழ்ச்சித்திட்டம் அதிகார சபையால் கைவிடப்பட்டு, அதற்காக துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எண்ணெய் தாங்கிகளையும் வேறு நிறுவனங்களிடம் வழங்கப்பட்டிருந்தன. ஆயினும் 1985 ஆம் ஆண்டு தொடக்கம் நிலுவையாக இருந்த ரூபா. 78,865,954 ஆன கடன் தொகை அடங்கலாக ரூபா. 157,943,367 தொகை அறவிடப்பட வேண்டிய மீதியும், ரூபா.220,171,884 ஆன முதலீட்டு மீதியும் மற்றும் ரூபா.324,046,799 ஆன திரட்டிய நிதியத்தின் மீதியும் என்ற வகையில் மீளாய்விற்கான ஆண்டு வரை நிதியத்தில் நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டிருந்தன.

2.2.4. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிதியத்தின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காதமையை குறிப்பிடுதல்.

தும்பு நார் கைத்தொழிலின் அபிவிருத்திக்காக சம்பந்தப்பட்ட தரப்புகளை பயிற்றுவிக்கும் நோக்கில் 2006 ஆம் ஆண்டு தொடக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த துன்கன்னாவ தும்பு நார் அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்தின் நடவடிக்கைகள், ஊழியர் பற்றாக்குறை மற்றும் இயந்திர உபகரணங்களின் பழுதுபார்த்தல்களை மேற்கொள்ளாமை காரணமாக 2020 பெப்ருவரி மாதம் தொடக்கம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ரூபா.1,586,383 செலவில் கொள்வனவு செய்த மூலதன சொத்துக்களும் அடங்கலாக இயந்திர உபகரணங்கள், தேங்காய் மட்டை நிரப்பிய மட்டை குழிகள், கட்டிடங்கள் மற்றும் எழுதுகருவி உபகரணங்கள் பயனற்று அழிந்து செல்லும் நிலைக்கு உள்ளாகும் நிலை அவதானிக்கப்பட்டது.

2.3 ஏனைய வியடங்கள்

(அ) பிரிடீஸ் சிலோன் கம்பெனி லங்கா கம்பெனிக்கு (B.C.C ) 1985 ஆம் ஆண்டு தொடக்கம் தேங்காய் எண்ணெய் விலை நிலைப்படுத்தல் நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட வட்டியுடன் கூடிய கடன் ரூபா.26,715,037 தொகை மற்றும் 2002, 2004 ஆம் ஆண்டுகளில் மூலதன அபிவிருத்தி நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட வட்டியற்ற கடன் ரூபா.31,550,000 தொகை என்ற வகையில் மொத்தம் ரூபா.58,265,037 ஆன கடன் தொகையை, ரூபா.52,150,917 ஆன வட்டியுடன் அறவிடுவதற்கு பயனுள்ள செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் கழற்றி அகற்றப்பட்ட, நீரின் வேதியியல் கன உலோகங்கள் பரிசோதனை செய்வதற்கு பயன்படுத்தப்படும் ரூபா.4,984,973 பெறுமதியான Atomic Absorption Spectrophotometer (AAS) உபகரணம் 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் இறுதியிலும் இயக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளாதபடியால், குறித்த சேவைகளை வழங்குதல் மற்றும் வருமானம் உழைத்துக்கொள்வதற்கு இயலாமல் இருந்துள்ளது. குறித்த உபகரணங்கள் கோளாறுடன் உள்ளது என்பதை வருடாந்த பொருட் மீளாய்வு அறிக்கையில் எந்தவொரு குறிப்பும் மேற்கொள்ளப்படவில்லை.

(இ) ஐய இசுர கடன் வழங்குவதற்காக 2015 மற்றும் 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஆலை அபிவிருத்தி நிதியத்திற்காக தேங்காய் எண்ணெய் விலை நிலைபடுத்தல் நிதியத்திலிருந்து ரூபா.76,277,972ம், அரசாங்கத்தால் ரூபா.123,000,000ம் என்ற வகையில் பெற்றுக்கொண்டிருந்த மொத்தம் ரூபா. 199,277,972 கடன் தொகை சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

டப்ளியு.பீ.சீ.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் அதிபதி